1295

# ஜகன்மோகினி

# JAGANMOHINI

1—9—58

25 நயா பைசா

1295
4.58




OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
30 DEC 1958
JL
183223




# ஜகன்மோகினி


ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.
—வீரராகவ கவி




செப்டம்பர் 1958. மலர் 35, இதழ் 9. விளம்பி ஸூ ஆவணி மீ


## விஷய அட்டவணை


பக்கம்

அரசாங்கக் கொள்கை
—வி. கே. பார்த்தசாரதி 1

பாரதப் பூங்கா
—வசுமதி ராமசுவாமி 6

காளிதாஸர் கனவு
கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி 9

ப்ரேமையின் எல்லை
—வி. ஆர் 13

சொல்லட்டுமா!
—ஹாஸ்யநடிகர் நாராயணராவ் 18

ஓயாத அலை
—கே. வி. விஜயலக்ஷ்மி 21

கிழக்கு வெளுத்தது
—வை. மு. கோ. [149-168]


## சிம்லாவிலுள்ள பஞ்சாப் ராஜாங்க பொருட்காட்சிசாலை.

சிம்லாவிலுள்ள பஞ்சாப் ராஜாங்கப் பொருட்காட்சி சாலையில் பகாடிக் கலைப் பிரிவைச் சேர்ந்த ஏராளமான ஓவியங்கள் இருக்கின்றன.

அந்த ஓவியங்களில் பெரும்பகுதி லாகூரிலிருந்த மத்திய பொருட்காட்சி சாலையைச் சேர்ந்ததாகும். 1947-ல் பஞ்சாப் மாகாணம் இரண்டாகப் பிரிக்கப்படும் போது அந்த ஓவியத்தொகுதியும் இரு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டது. பாகிஸ்தானில் ஒரு பகுதி வைக்கப்பட்டு இன்னொரு பகுதி சிம்லாவுக்குத் தாற்காலிகமாகக் கொண்டுவரப் பட்டது.

லாகூர் பொருட் காட்சிசாலையிலிருந்து இந்தியாவின் பங்காக பாரசீக முகலாய, ராஜஸ்தானி, காங்க்ரா கலைப்பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 880 மூல ஓவியங்கள் இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டன. அந்த ஓவியங்களில் பெரும் பகுதி பகாடி பிரிவைச் சேர்ந்தாகும். அந்த ஓவியங்கள் இந்திய கலைத்துறை வளர்த்துக்கு பஞ்சாப் வழங்கிய பொக்கிஷம் என்று சொல்லலாம்.

சென்ற சில வருஷங்களாக மேலும் அனேக ஓவியங்கள் அங்கே சேர்க்கப்பட்டுள்ளன. அவைகளில் கங்கராப் பிரிவைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமான ஓவியங்கள் இருக்கின்றன. சிவ-பார்வதி சம்பந்தமான புராண வரலாற்றுச் சித்திரங்களும், சண்டிதேவியின் வீரப் பிரதாபச் செயல்களைக் காட்டும் ஓவியங்களும், ராதா-கிருஷ்ண தெய்வீகக் காதல் லீலைக் காட்சிகளைக் கொண்ட ஓவியங்களும் இருக்கின்றன.

### கிரேக்கோ பௌத்த கலைப்பொருள்கள்

அந்தப் பொருட்காட்சிசாலையில் இருக்கிற இன்னொரு முக்கியமான அம்சம் பிரசித்திபெற்ற கிரேக்கோ-பௌத்த கலைப் பிரிவைச் சேர்ந்தவையாகும். பிரிவினைக்கு முற்பட்ட இந்தியாவின் வடமேற்குப்பகுதியில் கிருஸ்துமத ஆரம்பகாலத்தில் தழைத்தோங்கிய காந்தாரா பிரிவைச் சேர்ந்த ஓவியங்களுமிருக்கின்றன.

அந்தப் பொருட்காட்சிசாலையிலுள்ள இந்தியத் தொல்பொருள் பிரிவில் ஜெய்ன, ஹிந்து சிற்பங்களையும் கல்வெட்டுக்களையும் காணலாம்.

# அரசாங்கக் கொள்கை

## பயமளித்தலா ? — அபயமளித்தலா ?

ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார்.

**பேச்சும் காரியமும்.**

நமது இந்தியாவில் சுதந்திரம் பிறந்த பதினோராண்டு கழித்த 1958-ல் சுதந்திரம் பிறந்த மாதமாகிய ஆகஸ்ட்டு மாதத்தில், காங்கிரஸ் ஆட்சி கீழுள்ள சென்னை மாகாணத்திலும், இந்தியாவின் இதர மாகாணங்களிலும் அரசாங்க பாதுகாப்பு இலாகாவின் நடவடிக்கை, இன்றைய அரசாங்கக் கொள்கை, பயமளித்தலா, அபயமளித்தலா என்ற சந்தேகத்தைத்தான் குடியரசு கீழ் வாழும் குடிமக்கள் மனத்தில் எழுப்புவதாகிறது. சுதந்திர தினத்தன்று பல பல தலைவர்கள், பலவிதமாகப் பொன்மொழிகள் பகர்ந்து, பேச்சுரைகள் பொழிந்தனர். நமது ஸ்ரீ காமராஜரும், நாமெல்லாம் சச்சரவுகளும், துவேஷங்களும் விட்டு, பணத்திலோ, பதவியிலோ மோகங்கொள்ளாது, உழைப்பையே உயிர்ச்சாதனமாக்கி ஒத்துழைக்க வேண்டுமெனப் புத்திமதி காட்டியுள்ளார். கிராம முன்னேற்றமே க்ஷேம லாபந் தருவதென்றும், விவசாய விருத்தியே விரும்பும் நலனளிக்கவல்ல மந்திரக்கோல் என்றும் பல மந்திரிகளும் பலவிதமாக ஓதிவிட்டனர். சுதந்திர தினத்தன்று சென்னை கடற்கரையில், மந்திரி கக்கன் அவர்கள், மாஜி மேயர் செங்கல்வராயனவர்கள் தலைமையில், மாகாண முதல் மந்திரி ஸ்ரீ காமராஜர் முன்னிலையில், சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் ஆதரவில் நடந்தேறிய பொதுக்கூட்டத்தில், பொதுமக்கள் காங்கிரஸ் கட்சிக்குப் பெருவாரி ஆதரவளித்துப் பலப்படுத்த வேண்டுமென்று வேண்டி, காங்கிரஸ் கட்சியின் கடந்தகால பிரதாபங்களை விஸ்தரித்தும், வருங்கால பொருளாதாரச் சுதந்தரப் போராட்ட வெற்றியைக் குறித்துப் பிரமாதமாகப் பேசியும் உள்ளார். எல்லாம் இனிய பேச்சுக்கள்தான்—ஆனால் காரியத்தில் நடைபெற்றுப் போவதென்ன?

**வெறிபிடித்தவர்களுக்கு அபயம் அளிப்பதா?**

ஆகஸ்ட்டு முதலில் ஹிந்துப் பத்திரிகை ஒருவாரம் வெளிவராது நின்றதைப் பற்றியோ, அது விஷயமாய் நடந்தேறிய வேலை நிறுத்த நியாயத்தைப் பற்றியோ, அச்சமயம் போலீஸ் இலாகா பொதுமக்களுக்குப் பயமளித்தும், வெறியாளர்களுக்கு அபயமளித்தும் இருந்து வந்ததைக் குறித்தோ இதுவரை நேருமுதல், ஸ்ரீ கக்கன் வரையில் மாஜீயோ, இருப்பவரோவான மேயர்கள் உள்பட, பொறுப்புள்ள எந்த காங்கிரஸ் தலைவர்களோ,

அரசாங்க அதிகாரிகளோ ஒருவராவது ஒரு வார்த்தை யாவது மூச்சுவிட வில்லை; வருத்தமும் தெரிவிக்கவில்லை; இன்னல் அடைந்தோருக்கு அனுதாபம் அறிவிக்க வில்லை.

அரசு என்பது குடிமக்களின் உயிர்களையும், சொத் துக்களையும் பாதுகாத்து, அபயமளிக்க வேண்டியதோர் புனித ஸ்தாபனம். ஏற்கனவே காங்கிரஸ் கட்சிக்கும் ஆட்சிக்கும் பலவித அவதூறுகள் ஏற்பட்டு, மதிப்பு மறைந்து வருகிற நிலையில், பாதுகாப்பு இலாகாவே பாது காப்பு கொடாமல், வெறியர்களைக் கொள்ளையும், கொலை யும், சூறையும் செய்திட உதவி நிற்குமானால், இதனைக் கண்டியாமலும், கவனியாது போலும் விட்டு வரும் காங்கி ரஸ் ஆட்சிக்கு எப்படி இனியும் பலமோ, மதிப்புமோ அதிகரிக்கக்கூடும்?

இந்தியா சுதந்தரம் பெற்றதின் அடிப்படைக் காரணம், காந்திமகாத்மாவின் சாத்வீகப் போராட்டமும், அதற்கு உதவிக் கருவிகளாக அமைக்கப்பட்ட உண்ணு விரதமும், வேலைநிறுத்தம், மறியல் போன்ற புனித சாத னங்களுமே. ஆனால், ஆகஸ்ட்டு முதலில் ஹிந்து பத்திரிகை ஆபீஸில் நடந்தேறிய வேலைநிறுத்த காலத்தில், பொது மக்களுக்குப் பலவிதத்தில் கஷ்ட நஷ்டங்கள் உண்டாகும் படிக்கு அரசாங்க பாதுகாப்பு இலாகா நடந்துகொண்ட விஷயந்தான், வேலைநிறுத்த மென்ற காந்திமகானின் புனித சாதனம், இன்று எத்தகைய விஷம சாதனமாக்கப் பட்டுள்ளது என்பதை நிரூபித்ததாயிற்று. வேலைநிறுத்த மென்பது, தூய எண்ணத்துடன், ஒரு பொதுக்கூட்டத்தா ரது பொது நலத்தைக் கோரிச் செய்யப்படும் சாத்வீகத் தியாகமாயிருப்பது போய், சுயநலத் தேட்டத்திற்காக, ஒரு கட்சியார் மீது துவேஷ காரணமாய் எதிர்க்கட்சியா ரால் தூண்டி ஆதரிக்கப்பட்டு, எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்னுமாப்போல, பெருங் கலகமுண்டாக்கி, சூறை கொள்ளை என்பனவற்றிற்குத் தடங்கலில்லா வசதியளிக் கும் விஷமச் செயலே யாகிவருகிறது. இந்த விஷமச் செயலில் அரசாங்கமும் உள்கையா யிருக்கிறதோ வென்ற அபிப்பிராயம் பலப்படும் வகையில் ராஜரீகம் நடந்து வரு வதுதான் மிகவும் வருந்தத்தக்கது. ஹிந்துப் பத்திரிகை ஆபீஸ் தொழிலாளிகள் வேலைநிறுத்தஞ் செய்திருந்த காலத்தில், அவர்களோடு கூடி, அவர்கள் பெயரால் அட்ட காசங்களைச் செய்த வெறியாளர் கூட்டத்தைக் கண்டியா மலும், கலைக்காமலும், அடக்காமலும் அவர்களது அநீதங் களை நடந்தேற விட்டு, பக்கலிலேயே நின்ற போலீஸ்படை வாளா யிருந்ததென்றால், அரசாங்க ஆதரவோ, அதிகாரி

183223

உத்தரவோ இல்லாமலா அப்படை அப்படிக்குச் சும்மா யிருந்திருக்கக் கூடும்? இதைப்பற்றி எந்த அரசாங்க அதி காரிகளும் விசாரணை நடத்தாமல் ஊமையர் கண்ட கனவு போல, திருடனுக்குத் தேள்கொட்டிய கதைபோல சும்மா யிருப்பானேன்? குற்றமுள்ள நெஞ்சா? சென்னை அர சாங்கம் பயமளிக்கிறதா? அபயமளிக்கிறதா?

அகமதாபாத்தில் இம்மாதம் நடந்தேறிய மாபெருங் கலகத்தை கவனியுங்கள்—இங்கு போலீஸ் படை நடந்து கொண்ட மாதிரியும், அரசாங்கக்கொள்கை, பயமளித்தலா, அபயமளித்தலா என்றுதான் சிந்திக்கச் செய்கிறது.

1956-ஆகஸ்டில் கடந்த மகாகுஜாரத்திய கலகத்தில் இறந்த தியாகிகளுக்காக, அகமதாபாத்தில் காங்கிரஸ் ஹௌஸுக்கெதிரில், மகாகுஜராத் ஜனதா பரீஷத்தார், 1958-ஆகஸ்ட்டு 8-ல், ஞாபகச் சின்னங்கள் எழுப்பினர். இவை கட்டி முடியப்படும் வரையில் அரசாங்கமோ, போலீசோ, நகரசபையோ ஆக்ஷேபியாது பார்த்தவண்ண மிருந்தது. வேலை முடிந்த பின்னர், நள்ளிரவில், போலீ சார் அச்சின்னங்களை எடுத்தெரிந்தனர். உடனே கலகம் மூண்டது. போலீசார் இப்பொழுது அடிதடியும், குண்டு வீச்சும் செய்து கலகத்தை அடக்க முன்வந்துள்ளர். அனேகம் உயிர்களும், சொத்துக்களும் சேதமாயுள காந்திமகான் சாத்விக தியாகம் ஆரம்பித்த சபர்மதி இன்று வெறியாளர் கைகளால் குடிமக்களது உயிர்கள் தியாகஞ்செய்யப்படும் படுகளமாயுள்ளது. போலீஸ் அகற் றிய சின்னங்களைப் பரீஷத்தார் மீண்டும் கட்ட ஆரம்பித் தனர். போலீஸ் தடை உத்தரவுகள், அவசர கால சட் டங்கள் வந்தன. பரீஷத்தார் சாத்வீகப் போராட்டமும், உண்ணுவிரதமும் ஏற்றுளர். பரீஷத்தார் செயலை நகரசபை இப்பொழுது ஆமோதித்து அனுமதிக்கிறத. மேயர் ராஜீனமா செய்துவிட்டார். அரசாங்கம் நகரசபை அனுமதியை ஆமோதிக்க மறுக்கிறது.

சின்னம் கட்டப்படுவதைச் சும்மா பார்த்து நின்று விட்டு, கட்டி முடிந்தபின்னர் கலகம் கிளப்ப பாதுகாப்புப் படை முன் வருவானேன்? இதுவே முன்னர் சென்னை யில் ஹார்பர் வேலைநிறுத்தகாலத்தில் இதே போலீசார், அன்னிய வேலையாட்களை லாரி லாரியாக ஹார்பருக்குள் பந்தோபஸ்துடன் அழைத்துச் சென்று, வேலை நிறுத்தத் தைப் பலனற்றதாக்கவில்லையா? இதே போலீசு, இப் பொழுது சென்னையில் வேலை நிறுத்தம் செய்தவர்க ளோடு ஒத்துழைப்பானேன்? இதையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்தால், காங்கிரஸ் ஆட்சி, பாரபட்சமற்ற ஆட்சியல் லவா? கட்சி வெறி மூண்ட ஆட்சிதானே?—என்ற சந்தே

கம் உதிக்கவில்லையா? ஜனாதிபதி சென்னையில் வந்திருந்த பொழுது, அவர் முன்னிலையில்தானே இவ்வளவும் நடந்தது. அவரும் இதைப்பற்றி மூச்சுவிடாது வாளாயிருக்கின்றாரே! இதுதானா ஜனநாயக ஆட்சி முறை!

**வேலைநிறுத்தம் எதற்கு வேண்டுமானாலுமா?**

நமது உள்நாட்டு நிலைமை இத்தகையதாயிருக்க, நமது மத்தியசர்க்கார், கேரள கம்யூனிஸ்டு ஆட்சிமீது புகார்கூறி, இன்றைய கேரள நிலைமை குறித்துப் பரிசீலனை செய்ய, ஓர் விசாரணை சபை நிருவ வேண்டுமென்கின்றனரே! காங்கிரஸ் ஆட்சிகீழ், போலீஸ்படை உதவி கொண்டு அகமதாபாத்தில் உயிர்கள் மாள்வதையும், போலீஸ் உதவி மறுக்கப்பட்டுச் சென்னையில் சேதங்கள் விளைந்ததையும் விசாரித்தறிய விசாரணைசபை நிருவ, நேருவோ, அவரது மத்திய சர்க்காரோ ஏன் இதுவரைக் கனவிலும் கருதவில்லை? இதுதானா சமதர்மம்?

வேலை நிறுத்தமென்பது, அரசாங்க ஆதரவுபெற்ற கட்சியை பலப்படுத்தும் கருவியாகவன்றோ கையாளப்பட்டு வருகிறது! பிடிவாதக்காரச் குழந்தைகள், அழுது ஆகாத்தியஞ்செய்து காரியம் சாதித்துக் கொள்வதுபோல், பயமுறுத்திக் காரியசித்தி பெறும் சாதனமாகவல்லவா ஆகிவருகின்றது.

ஹைகோர்ட்டு ஜட்ஜு எங்கள் வட்டத்திற்கு வேண்டுமென ஜெய்பூரில் வக்கீல்கள் வேலை நிறுத்தம். லைப் இன்ஷ்யூரன்ஸு கார்ப்பரேஷன் உத்தியோகஸ்தர் ஒரு கோஷ்டி, ஸெப்டம்பரில் வேலைநிறுத்தம் செய்யப்போகிறார்கள். கல்கத்தாவில் டிராம்வே தொழிலாளர் வேலைநிறுத்தம் 12-8-58 முதல் நடந்துவருகிறது. கீழ்த்தர உத்தியோகஸ்தர் பயமுறுத்தலும், தபால் நிலைய உத்யோகஸ்தர்கள் தீராக்குறையும், ரெயில்வே தொழிலாளர்களும் தீராத் தொல்லைகளே! மாணவர்களும் படிப்பு வேலையை நிறுத்தி விட ஏவப் படுகின்றனர். உபாத்தியாயர்கள் மனக்கசப்புக்கு மருந்தில்லை. எங்கும் அதிருப்தியும், வேலை நிறுத்தமுந்தான் பயமுறுத்தலாயுள்ளது. அரசியல் கட்சிகளும், எதிர்ப்புக் கட்சிகளும், தொழிலாளிகளைத் துணைகூட்டிக் கட்சிக்கு ஆள்பலம் சேர்க்கப் போட்டியிட்டுத் தாமே உதவிப் பணங்கொடுத்தும் வேலைநிறுத்தங்களை விருத்தி செய்வதும் போலல்லவா இக்காலத்திய தொழிலாளர் சங்கங்களது நடவடிக்கை காண்கிறது. வயது வந்தோர்க்கெல்லாம் வாக்குரிமை கொடுக்கப்பட்டதின் விளைவோ, ஆள் பலங்கூட்டும் இக்கட்சிப் போராட்டங்கள்? தேர்தல்களில் நயவஞ்சகத் தந்திரம் போலாகிவிட்டதே தொழிற்சங்க சேஷ்டைகள்! தொட்ட

மாத்திரத்தில் விரோதி சாகவேண்டுமென்று வரம்பெற்றவன், வரம் கொடுத்த தெய்வத்தின் தலைமீதே கைவைத்து வரமகிமையைப் பரீக்ஷித்தறிந்தது போலாகிவிட்டதே, அராஜரீகம் அகற்றிச் சௌகர்ய வாழ்வுகொடுக்கக் காந்தி மகான் கொடுத்துச் சென்ற புனித கருவிகளாம் வேலை நிறுத்தமும், மறியல்களும், உண்ணுவிரதமும் இன்று, அராஜரீகம் ஏற்படவே உபயோகப்பட்டு வரும் வகை.

தொழிலாளர்பற்றிய சட்டதிட்டங்கள் கண்டிப்பான முறைகளில் சீர்திருந்தினால்தான் இனி சமூகத்தாருக்குச் சிறிதேனும் மன நிம்மதியுண்டாக்கக் கூடும். காங்கிரஸ் ஆட்சி மரத்தின் வேரைப் பற்றிக்கொண்டு, அம்மரத்தையே வீழ்த்திடப் பயமுறுத்தும் அராஜரீகப் புல்லுருவிகளைப் பிடுங்கி யெறியக்கூடிய வழியுமாகும். கட்சிப் பலப் போட்டி இன்னமும் இம்மாதிரி ஆள்கூட்ட விடப்பட்டால், சமதர்மம்போய், அராஜரீகமேஸ்தாபித்திட நமது அரசாங்கம், தன்னையுமறியாது, தானே வழிகோலியதுமாகும். எனவேதான் இன்றைய நமது கவலை, நமது அரசாங்கக் கொள்கை, பிரஜைகளுக்கு பயமளித்தலா? அபயமளித்தலா? என்பதுவும்.

---



# ★ பாரதப் பூங்கா ★

— வசுமதி ராமசுவாமி —

—○●❋●○—

மகாபாரதத்தில் தர்மபுத்திரர் காவ்ய நாயகனாக இருப்பவர். பஞ்ச பாண்டவர்களில் முதல்வரான தர்மபுத்திரர் தர்மராஜன் அம்சம் பெற்றவர். பாண்டவர்கள் தங்களுக்குரிய ராஜ்ஜியத்தைப் பெற்று இந்திரபிரஸ்த பட்டணத்தை தலைநகராக அமைத்து ஆட்சி செய்கிறார்கள். அரசனின் கடமைக்கு ஏற்ப ராஜஸூய யாகத்தை முறைப்படி நடத்துகிறார்கள். மேம்பாடு உடையவர்கள் எந்த பதவியில் இருந்தாலும் பெரியவர்களிடம் வினயமாகவும், மரியாதையாகவும் நடந்து கொள்வார்கள். யாகத்திற்கு பெரியோர்கள், முனிவர்கள் விஜயம் செய்து சிறப்பிக்கின்றார்கள். சிற்றரசர்கள் ரத்தினங்களையும் பொற்குவியல்களையும் காணிக்கையாக செலுத்துகிறார்கள்.

இவைகளைப் பார்த்துப் பொறாமை கொண்ட துரியோதனன் பாண்டவர்களை ஒழித்து கட்டிவிட வேண்டுமென நினைக்கிறான். பொறாமைத்தீ அவன் உள்ளத்தில் மூள்கிறது. சகுனி, "யுத்தம் செய்து பொருளை நஷ்டமாக்கி அநேக உயிர்களை பலி கொடுப்பதை விட பாண்டவர்களை தந்திரத்தால் வென்று விடலாம்'' என்றுத் தூபம் போட்டான்.

தர்ம புத்திரர் சூதாட்டத்திற்கு அழைக்கப் படுகிறார். வியாசர் 'ஏற்கெனவே துர்சகுனம் காண்கிறது. கலக்கம் கூடாது. புலன்களை அடக்கி வாழ்ந்து'நலம் பெறுவாய்' என்றெல்லாம் எச்சரிக்கை செய்திருக்கிறார். ஆனால் தர்மபுத்திரருக்கு இயற்கையா ஆடுவதிருசி உண்டு. அந்த ஆசை விவேகத்துடன் போராடி வெற்றி பெறுகிறது. துரியோதனனுக்காக சகுனி மாயக் காய்களை வைத்து ஆடுகிறான். தர்ம புத்திரர் ராஜ்ஜியத்தை இழக்கிறார். தம்பிமார்களை இழக்கிறார். தன்னையும் பணயம் வைத்து ஆடி இழந்து விடுகிறார். கடைசியில் திரௌபதியையும் வைத்து ஆடி இழக்கிறார். துச்சாதனன் பாஞ்சாலியை சபைக்கு அலங்கோலமாக இழுத்து வரும்போது கூட தர்ம புத்திரர் பொறுமையையும், சாந்தத்தையும் இழக்கவில்லை. தன் தவறை உணர்ந்து தலை குனிகிறார். பிறகு பனிரெண்டு ஆண்டுகள் காட்டில் படாத பாடு படுகிறார்கள். பதிமூன்றாவது வருஷம் அக்ஞாத வாசத்தில் பனிரெண்டு ஆண்டுகள் பட்ட துன்பத்தைவிட பன்மடங்குகஷ்டப்படுகிறார்கள். ஆனால் தர்மத்தை விடவில்லை. அவ்வப்போது கோபத்தில் வெகுண்ட தம்பிமார்களையும், குறிப்பாக பீமனையும் சமாதானம் செய்கிறார். பதிமூன்று வருஷம் முடிகிறது. பாரத யுத்தம் நடைபெறுகிறது. கௌரவ சேனை அழிகிறது. யுதிஷ்டிர பட்டாபிஷேகம் ஆகி அநேக வருஷங்களுக்குப் பிறகு கிருஷ்ணபகவனும் மறைகிறார். யாதவகுலமும் அழிகிறது.

பாண்டவர்கள் பேரனை பரீக்ஷித்துக்கு பட்டம் கட்டி பிறகு இமயமலையை நோக்கி வானப்பிரஸ்தம் போய் விடுகிறார்கள் மலை ஏறும்போதே தர்மபுத்திரருடைய நான்கு தம்பிமார்களும் பாஞ்சாலியும் உயிரை விடுகிறார்கள். தர்மபுத்திரர் தனியாக நடந்து செல்லுகிறார். அவருக்

குத் துணையாக ஒரு நாய் வருகிறது. தர்மத்தின் சக்தி எல்லையற்றது. தெய்வ பலத்தைப் போன்றது. பரலோகத்திற்கு துணையாக வரும் தர்மதேவதைதான் அந்த நாய். இந்திரன் ரதத்துடன் வந்து தர்மபுத்திரரை ஏறிக் கொள்ளச் சொல்லுகிறுன். அவர் ஏறும் போது நாயும் ஏறிற்று. இந்திரன் நாய்கூட வரக்கூடாது என்றுன். தர்மபுத்திரன் அப்படியானுல் நானும் வரவில்லை என்றுர். உடனே நாய், "நான் உன் பிதாவான தர்மராஜன்; உன்னைச் சோதிக்க வந்தேன்" என்று சொல்லி மறைகிறது.

தர்மபுத்திரர் சொர்க்கத்திற்குப் போகிறுர். துரியோதனன் ராஜாவாக இருக்கிறுன். இதை பார்த்த யுதிஷ்டிரர், "கணக்கற்ற அக்கிரமம் செய்து பாஞ்சாலியையும் அலங்கோலம் செய்த இவனுக்கு இவ்வளவு போகமா? எனக்கு இருக்கப் பிடிக்கவில்லை என் தம்பிகள் எங்கே? அழைத்துப்போ என்றுர். சகலமும் அறிந்த நாரதர் சொர்க்கத்தில் விரோதமே கிடையாது. நீ பூத உடலுடன் வந்ததால் அப்படித் தோன்றுகிறது. என உபதேசம் செய்கிறுர்,

யுதிஷ்டிரர் சமாதானம் அடைந்து, "என் சகோதரன் கர்ணன் முதலானவர்களைப் பார்க்க ஆசைப்படுகிறேன்" என்றுர். ஒரு தூதன் தர்மபுத்திரரை அழைத்துப் போகிறுன்.

போகும் வழியெல்லாம் துர்நாற்றம். அபயக் குரல்கள், புண்ணியவானே உன் தர்மமான மூச்சுக்காற்று இங்கு நிலவட்டும். எங்களுக்கு நாற்றம் சகிக்கவில்லை இன்னும் ஒரு முஹூர்த்தம் இங்கு இரு என்ற குரல்கள் கேட்டன. தர்மபுத்திரர் "நீங்களெல்லாம் யார்?" என்றுர். நான் உங்கள் தம்பி பீமன், நான் நகுலன், நான் அர்ஜுனன், நான் பாஞ்சாலி இப்படி காதைத் துளைத்தன. தர்மபுத்திரருக்கு தன் சகோதரர்களின் நிலையைக் கேட்க துக்கம் தாங்கவில்லை. தூதன் தேவலோகத்துக்குப் போகலாமென துரிதப்படுத்தினுன். தர்மபுத்திரர், "என் தம்பிமார்கள் இங்கே நரகத்தில் தவிக்கிறுர்கள், எனக்கு சொர்க்கலோகம் வேண்டாம், நானும் இங்கேயே இருக்கிறேன்" என்றுன். உடனே தர்மராஜன், இந்திரன், நாரதர், அனைவரும் வந்தார்கள்.

நரக காக்ஷி மறைந்து தெய்வ லோகமாயிற்று. தர்மராஜன், "மகனே! உன்னை மூன்று முறை சோதித்தேன், நீ தர்மத்தினின்று பிறழாமல் இருந்து விட்டாய். உன் தம்பிமார்களும் கர்ணன், பாஞ்சாலி அனைவரும் சொர்க்கத்தில் தானிருக்கிறுர்கள். நீ கேட்டவைகள் எல்லாம் மாயக் குரல்கள்" என்றுர்கள்,

ஆலமரம் எதையும் எதிர்நோக்காமல் பிறருக்கு அரும் நிழல் தந்து உதவும். பாரதப் பூங்காவில் தர்மபுத்திரர் ஆலமரத்தைப் போன்றவர். ❋

---

**— விடுகதை —**

கிட்டு:- ஊசி மனிதனுக்கு உடம்பெல்லாம் திருமணம் என்னது சொல்லுடா பார்ப்போம்

ராமு:- வந்து... இருடா...?

கிட்டு:- ஐயோ! இவ்வளவு தானு... ஊதுவத்திடா... ஊதுவத்தி.



## சிறந்த சுகாதாரத்துக்கான லட்சியப் பாதை

வறுமையையும் பிணியையும் எதிர்த்து நடந்துவருகிற தேசியப் போராட்டத்தில் நோயைக் குணமாக்கும் ஏற்படுகள் ஒருபுறமிருக்க, அவைகளைத் தடுக்கும் முறைகளுக்கு வரவர அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. பெருவாரியாக பி. ஸி. ஜி. ஊசிகுத்துவது, காலரா, பிளேக் முதலிய நோய்களைத் தடுப்பதற்கான தடுப்பு ஊசி குத்துவது போன்றவை இவ்வியக்கத்தின் பிரதான அம்சமாகும்.

கல்கத்தாவுக்குப் பக்கத்திலுள்ள கிராமமொன்றில் பிளேக் தடுப்புக்காகப் பெருவாரி மக்களுக்கு ஊசி குத்தும் இயக்கம் நடத்தப்பட்ட உலக சுகாதார ஸ்தாபன நிபுணரொருவர் ஊசிகுத்துவதை இப்படத்தில் காணலாம்.

## காவிதாசர் கனவு.

### 12, சகுந்தலை பரத தர்சனம்:

[ஸ்ரீ. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

க்ரீவாபங்காபி ராமம் முகுரனுபததி
ஸ்யந்தனே தத்தத்ருஷ்டி:
பச்சார்த்தேன ப்ரவிஷ்ட: சரபதன
பயாத்பூயஸா பூர்வகாயம் |
தர்ப்பைரர்த் தாவலீடை: ச்ரமவிவ்ருத
முகப்ரம்சிபி: கீர்ணவர்த்மா
பச்யோதக்ர ப்லுதத்வாத் வியதிபஹு தரம்
ஸ்தோகமுர் வ்யாம்ப்ரயாதி ||

(அழகாகக் கழுத்தை வளைத்துத் தேரை அடிக்கடி நோக்குகின்றது. அம்பு தன்மேல் விழுமோ என்ற அச்சத்தால் பின்னுடல் முன்னுடலில் புகுந்ததோ என்று தோன்றுகின்றது. பாதி தின்ற புல்கள் அயர்ந்த வாயிலிருந்து கீழே விழுகின்றன. குதித்துக் குதித்து ஓடுவதால் அதிகப்பொழுது காற்றுலகத்திலும் சுருங்கியபொழுது மண்ணுலகத்திலும் இருப்பதாகத் தோன்றுகின்றது).

இந்தச் செய்யுளில் பயானகரஸம் சுபர்வோக்தி தவிர உலகத்தின் கொடுமையான வேட்டையிலிருந்து தப்பி ஓடுங் கலைஞனை யுவனுடைய நிலைமையையும் என் மனதில் வைத்தே கூறியிருக்கின்றேன். அவனும் மண்ணுலகில் அல்ப சம்பந்தத்துடன் கற்பனையுலகமாகின்ற விண்ணுலகத்தில் தாவித் தாவிச் செல்லும் உள்ளத்துடன் இருப்பன். இது தவிர சகுந்தலையின் வருங்காலத் துயரத்தையும் குறிப்பாகக் கூறியிருக்கின்றேன்''.

"தேர் அந்த மானை நெருங்கியவுடன அரசன் அதைக் கொல்ல அம்பைத் தொடுத்தபொழுது, பக்கத்தில் ''அரசனே! இது ஆசிரம மான்குட்டி. இதைக் கொல்லகூடாது'' என்ற சத்தம் கேட்டது. முன்கூறியபடி, இந்த நாடகத்தில் தூய்மையான கள்ளங்கபடு அறியாத மாசற்ற சகுந்தலை நிலையை மான்குட்டி நிலையால் குறித்தேன். அரசன் அம்பைஎய்யாமல்நிறுத்தித்தேரையும் நிறுத்தச்சொன்னான். உடனே ஒரு தவசி எதிற்பட்டு''பஞ்சுப் பொதியில் நெருப்பை வைப்பதுபோல் இந்த மெலிந்த மான் உடலில் அம்பை எய்யவேண்டாம். மிக அல்பமான மான உயிர் எங்கே, வஜ்ராயுதம் போன்ற உங்களுடைய கூர்மையான அம்பு எங்கே? உங்களுடைய அம்புறுத்தூணியில் வைத்து விடுங்கள். உங்களுடைய ஆயுதம் மெலிந்து வருந்தினவர்களைப் பாதுகாக்கவே தவிர குற்றமற்றவர்களைத் தாக்குவதற்கல்லவே'' என்று கம்பீரமாக மொழிந்தார்.

ஆர்த்தத்ராணாய வ: சஸ்த்ரம்
நப்ரஹர்து மனாகஸி |

அரசன் அப்படியே செய்யவே அவர் "புரு வம்சத்தில் பிறந்த உனக்கு இது மிகவும் தகுதியான செய்கை. இத்தகைய குணமுள்ள நீ இந்தப் புண்ணிய தேசச் சக்கரவர்த்தியாக விளங்கப்போகிற உத்தம புத்திரனை அடைவாயாக" என்று ஆசிகூறினர்.

ஜன்ம யஸ்ய புரோர்வம்சே
யுக்த ரூபமிதம்தவ |
புத்ரமேவம் குணோபேதம்
சக்ரவர்த்தின மாப்னுஹி ||"

"பிறகு துஷ்யந்தனை ஆசிரமத்திற்கு வந்து அதிதி பூஜையையே ஏற்றுக்கொள்ள வேண்டவே அவன் சம்மதித்தான். அரசன், "இது யாருடைய ஆசிரமம்" என்று வினவ, அவர் "இது கண்வர் ஆசிரமம், அவர் தன் குழந்தை சகுந்தலேக்குத் தீங்குகள் வராமலிருக்க சோம தீர்த்தத்திற்கு யாத்திரையாகப் போயிருக்கின்றார். அவர் திரும்பிவரும் வரையில் அவளை அதிதி பூஜை செய்ய நியமித்திருக்கின்றார்" என்றார்.

பிறகு அரசனும், அவனுடைய நண்பனான விதூஷகனும் ஆசிரமத்திற்குச் சென்றார்கள். அப்பொழுது அரசனுடைய வலது தோள் துடித்தது. அரசன் "இந்த ஆசிரமம் சாந்தி நிரம்பிய இடம். வலது தோள் துடிப்பானேன். இதற்கு என்ன பயன்? ஆனால் நடைபெற வேண்டிய சம்பவங்கள் உண்டாக வழிகள் எவ்விடத்திலும் ஏற்பட்டே தீரும்" என்று நினைத்தான்.

சாந்தமிதமா ச்ரமபதம்
ஸ்புரதிசபா ஹு: குத: பலமிஹாஸ்ய |
அதவாபவிதவ்யானம்
த்வாராணி பவந்தி ஸர்வத்ர ||

ஆசிரமத்தில் மூன்று பெண்கள் செடிகளுக்குத் தண்ணீர் விட வருவதைக் கண்டு அவர்களுடைய அழகைப் பார்த்து வியந்தான். அவர்களுக்குள் அதிக ஒளியுடன் தெய்வப் பெண்ணைப்போல் விளங்கும் சகுந்தலையின் அழகைக் கண்டு ஆச்சர்யப்பட்டு, "இவள் உயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்துகொள்ளா விட்டாலும், பாசியாற் சூழப்பட்டத் தாமரை எப்படிக் குன்றாத அழகுடன் விளங்குமோ, எப்படிச் சந்திரனழகைக் குறைக்காமல் சந்திரபிம்பத்தில் உள்ள மாசு புதிய சோபையைத் தருமோ அப்படி இவளுடைய இயற்கையழகை இவளை மரவுரிச் சேலைக் குறைக்காமல் அதிக சோபையை யளிக்கின்றது. அழகும் லாவண்யமும் பொருந்திய உடலுள்ளவர்களுக்கு எதுதான் அணியாகாது" என்று தனக்குள் எண்ணினான்.

ஸரஸிஜமனுவித்தம் சைவலேனபிரம்யம்
மலினமபிஹிமாம் சோர்லக்ஷ்மலக்ஷ்மீம் தனோதி |
இயமதிக மனோக்ஞா வல்கவேனபிதன்வீ
கிமிவஹி மதுராணம் மண்டனம் நாக்ருதீனம் ||

"ஆனால் "அவள் அந்தணப் பெண்ணாக இருந்தால் அவளை மணஞ் செய்துகொள்ள முடியாதே என்றும் மணஞ் செய்து கொள்ளக்கூடாத மங்கையை மனத்தால் நினைப்பது தவறாகுமே" என்றும் நினைத்தான். ஆனால் மறுபடியும் ஆலோசனை செய்து, "இவள் க்ஷத்திரியர் மணஞ் செய்துகொள்ளக் கூடியவளாகத் தான் இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் மாசற்ற என் மனம் இவளை நாடுமா? தூய்மை வாய்ந்தவர்களுக்கு ஐயமேற் பட்டால் அவர்களுடைய மனத்தின் தீர்மானமேப் பிரமாண மாகும்" என்று தன் மனதைத் தேற்றிக்கொண்டான்."

அஸம்சயம் க்ஷத்ர பரிக்ரஹக்ஷமா
யதார்ய மஸ்யாமபிலா ஷிமேமன: |
ஸதாம் ஹிஸந்தேகபதேஷு வஸ்துஷு
ப்ரமாணமந்த: கரணப்ர வ்ருத்தய: ||

அப்போது ஒரு வண்டு சகுந்தலையை நாடிச் சுற்றிச் சுற்றி வரவே அவள் அச்சமடைந்தாள். அதைக் கண்டு துஷ்யந்தன் மிகக் களிப்பை யடைந்தான். அவன், "வண்டே! அவளுடைய மிரண்ட விழிகளை நீ நெருங்குகின்றாய். ரகசியம் கூறுபவனைப் போல் அவளுடைய செவிகளருகில் ரீங்காரம் செய்கிறாய். அவள் உன்னைத் தன் கைகளை ஆட்டித் தடுத்தாலும் நீ அவளுடைய உதட்டைச் சுவைக்கின்றாய். நாங்கள் உண்மையை ஆராய்ந்து ஆராய்ந்து பாழாகப் போகிறோம், நீதான் பிறவிப் பயனை அடைந்தவன்" என்று காதலால் கனிந்த மொழிகளைக் கூறினான்.

சலாபாங்காம் த்ருஷ்டிம் ஸ்ப்ருசஸி
பகுசோ வேயது மதீம்
ரகஸ்யாக்யாயீ வஸ்வளஸி ம்ருது
கர்ணாந்தி கசர: |
கரௌவ்யாதுன் வத்ய: பிபஸி
ரதிஸர் வஸ்வமதரம்
வயம் தத்வான் வேஷாத் மதுகர
ஹதாஸ் த்வம் கலுக்ருதீ ||

"காவ்ய ரசமும் கலைரசமும் காதல் ரசமும் இத்தகையதே. தத்துவ விசாரஞ் செய்து காரணத்தையும் உண்மையையும் தேடிக் கண்டுபிடிப்பதில் பொழுதைச் சிலவழித்தால் ஆனந்தம் மறைந்து போகும்" என்று காளிதாஸர் பொருளை விளக்கி கூறினார்.

சகுந்தலைத் தன் இரு தோழிகள் அனசூயை ப்ரியம் வதையை நோக்கி, "இந்த துஷ்டனிடத்திலிருந்து நீங்கள் என்னைப் பாதுகாக்கவேண்டும்" என்று ஓலமிட்டாள். அவர்கள் "அரசன் துஷ்யந்தனைக் கூப்பிடு" என்று ஏளனம் செய்தார்கள். அரசன் நெருங்கிப் போக இடம் கிடைத்ததற்காக மகிழ்ந்து, "துஷ்யந்தன் உலகத்தை ஆட்சிசெய்யுங் காலத்தில், எவன் தவப்பெண்களிடத்தில் அக்கிரமமாக நடப்பவன்" என்று மிரட்டிக்கொண்டே அங்கே சென்றான். அப்பொழுது அனசூயைத் "தாங்கள் கூறியது வண்டைப்பற்றி" என்று பணிவு

டன் கூறினாள். பிறகு அரசன் அனசூயை ப்ரியம்வதையுடன் பேசிச் சகுந்தலை விச்வாமித்திரருக்கும் மேனகைக்கும் பிறந்த பெண் என்று அறிந்தான், "மனிதப் பெண்களுக்கு இவ்வளவு அழகும் ஒளியும் உண்டா? பளபளவென்று கண்ணைப் பறிக்கும் பிரகாசம் விண்ணுலகத்தின் சம்பந்தமின்றி மண்ணுலகிலிருந்து உண்டாகாது" என்று கூறினான்.

மாநுஷீஷு கதம் வாஸ்யாத்
அஸ்ய ரூபயஸ் ஸம்பவ: |
தநப்ரபா தரலம் ஜ்யோதி
ருதேதி வஸுதா தலாத் ||

இதைக் கேட்டு சகுந்தலை வெட்கித் தலைகுனிந்தாள். "சகுந்தலையை மணஞ்செய்து கொடுக்கத் தகுந்த நாயகன் கிடைக்க வேண்டுமென்று கண்வருடைய விருப்பம்" என்று ப்ரியம்வதை அரசனிடம் கூறினாள். அரசன் "மனமே! ஆசையைக் கடைப்பிடி, இப்பொழுது ஐயம் நீங்கிவிட்டது. நெருப்புத் துண்டமென்று நீ நினைத்த பொருளே தொடக் கூடிய மாணிக்கமாக இருக்கின்றது" என்று தனக்குள் நினைத்து மகிழ்ந்தான்.

பவஹ்ருதய ஸாபிலாஷம்
ஸ்ம்பரதி ஸந்தேஹ நிர்ணயோ ஜாத: |
ஆசங்கஸே யதக்னிம்
ததிமம் ஸ்பர்ச க்ஷமரத்னம் ||

சகுந்தலை வெட்கத்தால் பர்ணசாலைக்குப் புறப்படவே ப்ரியம்வதை அவளை நோக்கி, "நீ கவனிக்காத இரண்டு செடிகளுக்கு நான் தண்ணீர் விட்டேன். அந்தக் கடனைத் தீர்த்துச் செல்" என்றாள். அரசன் தான் இரண்டு செடிகளுக்குத் தண்ணீர் அவளுக்குப் பதிலாக விடுவதாகக் கூற, ப்ரியம்வதை "உங்கள் வார்த்தையே போதும். நான் இவளைக் கடனிலிருந்து விடுவித்து விட்டேன். சகுந்தலை! நீ போகலாம்" என்றாள். அப்பொழுது சகுந்தலை "என்னைப்போகவாவது இருக்கவாவது நீ எப்படி ஏவலாம்?" என்றாள். "அவள் என்னுடன் பேசா விட்டாலும் நான் பேசும்பொழுது என்னுடைய சொற்களைக் கவனமாகக் கேட்டாள். அவள் என்னை நேராக நோக்கா விட்டாலும் வேறு ஒன்றையும் அவள் நோக்கவில்லை. நான் நோக்கினால் தன் கண்களைத் திருப்பிக்கொண்டாள். வேறு எதற்காகவோ போல் புன்முறுவல் செய்தாள். நாணத்தால் காதலைக் காட்டவுமில்லை; மறைக்கவுமில்லை."

வாசம் நமிச்ரயதி யத்யபி மத்வசோபி:
கர்ணம் ததாத்யபிமுகே மயிபாஷமாணே
காமம் நதிஷ்டதி மதானன ஸம்முகீஸா
பூயிஷ்டமன்ய விஷயா நதுத்ருஷ்டி ரஸ்யா: ||
அபிமுகே மயிஸம்ஹ்ருத மீக்ஷணம்
ஹஸித மன்ய நிமித்த க்ருதோதயம் |
வினய வாரித வ்ருத்திரி தஸ்தயா
ருவிவ்ருதோ மதனோ நசஸம்வ்ருத: ||

# ப்ரேமையின் எல்லை

'வி ஆர்'

அட்டைப் படக் கதை

"ஆ...அப்பாடா..." என்று வியர்வையைச் சுண்டி எறிந்தவாறு களைப்பு மேலிட தரையில் தடால் என்று அமர்ந்தான் ரவி.

"ரவி! என்னப்பா...கண்ணு. ரொம்ப களைத்துப் போயிருக்கிறாயே? ஏதாவது பலன் கிட்டியதா? இல்லையா?" என்று ஆதரவோடு தன் மைந்தனைத் தடவிக் கொடுத்தாள் கண் பார்வை யில்லாத அவன் அன்னை.

அவனால் வாயைத் திறந்து கூடப் பேச முடியவில்லை. தலையை மட்டும் இல்லை என்பதற்கு அடையாளமாக ஆட்டினான். ஆனால் அவளுக்குத் தெரிந்ததா? அவன் உள்ளம் வேதனையால் வெந்தது. உண்ணவும் பிடிக்காது அப்படியே படுத்துவிட்டான். "ரவி! ஏனப்பா வருந்துகிறாய்? நம் அதிர்ஷ்டம் அவ்வளவு தான். போதாத காலம் நம்மை ஆட்டுகிறது. வேலை கிடைப்பது இந்தக் காலத்தில் அவ்வளவு கஷ்டமாயிருக்கிறது. உன் அப்பாவின் கை உடைந்து சம்பாதிப்பது நின்ற பிறகும் கூட உன் புத்திகூர்மையால் பலவிதமாய் கஷ்டப்பட்டு நன்றாய் படித்தும் விட்டாய். ஆண்டவன் உடனே அதற்கேத்த பலனை அளிக்காது நம்மை அலக்கழிக்கிறாரே. பாவம்! மாலினியும் எங்கெங்கோ அலைகிறாள். உனக்குக் கிடைக்கும் பதிலே தான் அவளுக்கும் கிடைக்கிறது" என்று தன் மனது படும் அவஸ்தையை சிறிது குறைத்துக் கொள்ள விஷயத்தை வெளியிட்டு தன்னைத் தானே தேற்றிக் கொண்டாள்,

"அம்மா! நீ ஏனம்மா கலங்குகிறாய். என் மனம் பின்னும் வேதனைப் படுகிறது" என்று விம்மினான் ரவி.

"என் கண்ணே!" என்று தன் மகனை அணைத்துக் கொண்டாள். அவன் முகத்தில் எழும் உணர்ச்சிகளைக்கூட காணமுடியாதவாறு அவளது விதி தடுத்தது. "ரவி! உன்னையும் மாலினியையும் சீக்கிரம் மணக்கோலத்தில் ரதியும், மன்மதனையும்போல் நிற்க வைக்க வேண்டும் போல் மனது பறக்கிறது. என்னால் கண்டு களிக்கமுடியாவிட்டாலும் கேட்டு உணர்ந்து களிக்கலாமல்லவா? நானும், அப்பாவும் இருக்கும் நிலைமையைப் பார்த்தால் நன்றாயிருக்கும்போது உங்கள் இருவருக்கும் திருமணம் நடந்து விட்டால் போதுமப்பா."

"அப்படியெல்லாம் பேசாதீர்களம்மா...உனக்கும் அப்பாவுக்கும் வயிறு நிறைய ஆனந்தத்தோடு உண்ண உணவளிக்கும்படி ஒரு வேலை கிடைத்து விடட்டும். பிறகுதானம்மா... கல்யாணம்" என்றான் உறுதியோடு. அன்று பேச்சு அதோடு நின்றது. உலகம் இரவு போர்வை விரித்துப் படுத்தது- எல்லோரும் படுக்கத் தொடங்கினர். ஆனால் உறக்கம் அவர்களை ஆட்கொண்டால் தானே. நித்திராதேவி கூட அவர்களை உதறித் தள்ளி விட்டாள்.

முதியவர்கள் இருவரும் ஒரு மூலையில் பெருமூச்சு விட்டவாறு விதியை நெந்து புரண்டு கொண்டிருந்தனர். ரவியின் உடலோடு உள்ளமும் வாடி சுருண்டு கிடந்தான். சோதனையின் கொடுமையால் வாடும் தன் மாமன் குடும்பத்திற்கு விடிவு விமோசனம் கிடையாதா? என்று ஏங்கிக் கொண்டிருந்தது மாலியின் மனம்.

வானத்து வெளியில் மதி மன்னன் மந்தகாசத்துடன் பவனி வரத் தொடங்கிவிட்டான். வண்ணத் தாரகைகள் அந்த ஆனந்தத்தில் கண் சிமிட்டி அவனை வரவேற்றுக் களிக்கூத்தாடின. பால் வெள்ளத்தை உலகு முழுவதும் வாரி யிரைத்தான் சந்திரன். எல்லோருக்கும் குளுமையையும் இன்பத்தையும் கொடுத்தான்.

ஆனல் ரவிக்கு மட்டும் தன்னைச் சுற்றி அந்தகாரமே சூழ்ந்திருப்பதுபோல்ப்ரமை. நிம்மதியற்ற மனத்தில் ஏற்பட்ட வெறுப்பு எல்லாம் சேர்ந்து அவனை படுக்கக்கூட வைக்கவில்லை. மெள்ள எழுந்து அறைவிட்டு வெளி முற்றத்தில் வந்தமர்ந்தான். சிந்தனையைக் கட்டி யணைப்பதைத் தவிர அவனல் என்ன இயலும். சிறிது நேரத்தில் அவனருகே காலடி ஓசை கேட்டது. தொடர்ந்து ஒரு அன்பான கை அவன் தோள் மீது பதிந்தது.

"மாலினி! நீ எதற்கு இங்கு வந்தாய் ... இந்த நேரத்தில். இன்னுமா நீ தூங்கவில்லை?" என்று கேட்டவாறு அவளைத் தன் அருகில் அமர்த்திக் கொண்டான்.

"ரவி! நீங்கள் தினமும் தூங்காது தவித்து இங்குவந்தமர்ந்து யோசிப்பதைக் கவனிக்கிறேன். ஆனல் இன்றுபோல் வரவில்லை. என்ன யிருந்தாலும் பெண்தானே. இன்று தினத்தைவிட உங்கள் முகத்தில் வருத்தம் அதிகமாகத் தாண்டவ மாடுகிறது. ஏன் ரவி?"

"சொல்வதற்கு என்ன இருக்கிறது மாலினி!"

"ஹூம்...எனக்கு மட்டும் தூக்கம் வருகிறதா? உங்களுக்கு இருக்கும் அக்கரை, பற்று, மற்ற உணர்ச்சிகள் யாவும் எனக்கும் இல்லையா? நானும் தான் எங்கெங்கோ வேலைக்கு அலைகிறேன். பள்ளிக் கூடங்களுக்கு ஏறியிறங்கி கால்தான் ஓய்ந்து போகிறது"

"ஐயோ மாலினி! நீ எதற்கு வேலை செய்யவேண்டும். உன்னை வேலை வாங்கி வருத்த என் மனது சம்மதிக்காது. நீ வீட்டோடு இரு மாலினி. உனக்கெதற்குக் கஷ்டம்?"

"கஷ்டமா? ஹூம்...அன்று தாய் தந்தை யின்றி அனாதையாகக் கிடந்த என்னை எடுத்து வந்து ஆளாக்கி தங்கள் அருமைக் குமாரனுக்குத் துணைவியாக்கத் தீர்மானித்திருக்கும் உங்கள் பெற்றோரை வைத்து பூஜிக்கவல்லவா வேண்டும். அப்படியிருக்க அவர்களுக்காக நான் வேலையா செய்யக் கூடாது. உங்களுக்கு வேலைக் கிடைக்காது போய்விட்டால் நான் சம்பாதித்து சாப்பிடுவதா? ஒருவர் சம்பாதித்து மற்றவர் வீணயிருப்பதா? என்றெல்லாம் நீங்கள் நினைக்கிறீர்கள். அந்த எண்ணத்தை முதலில் விடுங்கள். கௌரவமான வேலை செய்தால் என்ன தவறு. நானும் செய்கிறேன்.

நீங்களும் செய்யுங்கள் என்ன!'' என்ருள் மாலினி.

''மாலினி! உன் குணத்தை நினைத்து மெய்மறந்தேன். இப்படிப்பட்ட நல்ல குணம் வாய்ந்த உன்னை வாட்ட வேண்டியிருக்கிறதே. என்று தான் நம் துன்பம் தீர்ந்து நாம் இருவரும் இன்பமாக, இந்த நிலவைப் போல வாழ்க்கை நடத்தப் போகிரோம்?''

''கூடிய சீக்கிரம் நடத்துவோம். அடடா......ஜாமத்து கோழி கூவிவிட்டதே. எழுந்திருந்து படுக்கப் போங்கள்'' என்று அவளும் எழுந்தாள். நிலவொளியில் அவர்கள் பிம்பம் பார்க்க ரம்மியமாயிருந்தது.

''மாமீ...மாமீ...'' என்று மகிழ்ச்சிப் பொங்க குதித்தவாறு ஓடி வந்தாள் மாலினி.

''என்னம்மா!...என்ன மாலினி'' என்று ஆவல் ததும்ப வினவினுள் அவள் மாமி.

''எனக்கு வேலை கிடைத்து விட்டது மாமி. இந்த ஊர் கோடியில் ஒரு புதிய பள்ளிக்கூடம் இருக்கிறதே. அங்கு மூன்றும் வகுப்பிற்கு வாத்தியாராக போட்டிருக்கிருர்கள்''

''அப்படியா! என் செல்வமே...ஆண்டவன் க்ருபைதான். ரவி ரொம்ப சந்தோஷப்படுவான். இல்லையா!''

அன்று ஏனே ரவி இரவு வெகுநேரம் ஆகியும் வீடு திரும்பவேயில்லை. காரணம் அறியாது மாலினியும், அவள் மாமியும் அலைந்தனர். மாலினி உள்ளுக்கும் வெளிக்கும் நடந்து அவன் வரவை நிமிடத்திற்கு ஒருமுறை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஊரடங்கிய பிறகு ரவி அலுத்து சலித்து வந்து சேர்ந்தான். அவன் வதனத்தில் தெளிவில்லாதது கண்டு அன்றும் தோல்விதான் என்பதை மாலினி முதலிலேயே ஊகித்துக் கொண்டாள். மௌனத்திலிருந்தே விஷயத்தை அறிந்து கொண்ட அவன் தாய், அவன் சோர்வை நீக்கி சந்தோஷமூட்ட ''ரவீ! இன்று உனக்கொரு மகிழ்ச்சிகரமான விஷயம் சொல்லப் போகிறேன்'' என்று கூறி அவன் மனதைத் திருப்பினுள்.

''என்னம்மா! சந்தோஷ சமாசாரமா!''

''ஆமாம் ரவி! நம் மாலினிக்கு ஒரு பள்ளிக்கூடத்தில் வேலை கிடைத்துவிட்டது.''

''நிஜமாகவா மாலினி! ரொம்ப சந்தோஷமம்மா''

''உங்களுக்கும் கிடைத்துவிடும் ரவி. கவலைப்படாதீர்கள்''—என்ருள் மாலினி.

சில நாள் சென்று ரவிக்கும் வேலை கிடைத்துவிட்டது. தன் தாயிடம் கூறி ஆனந்தப்பட்டான். மாலினியிடமும், ''மாலினீ! நீ கூறியது போலவே சீக்கிரம் வேலை கிடைத்துவிட்டதே. உனக்கு ஜோஸியம் கூட தெரியுமா?'' என்று ஓரக்கண்ணுல் பார்த்தபடியே கேட்டான்.

ஆனுல் அவன் மனதில் மட்டும் பூரண த்ருப்தி ஏற்பட்டதா? இல்லை. உண்மையில் அவனுக்கு படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கவில்லை. அப்

போது வறுமைத் தீர்க்க, பெற்றோருக்குத் தெம்பைக் கொடுக்க ஏதோ ஒரு வேலை கிடைத்தால் போதும் என்று ஏற்றுக் கொண்டான். அது அவன் மனதோடு இருக்க வேண்டிய ரகசியம்.

தினமும் காலையில் பிற்பக லுக்கு வேண்டிய உணவோடு ரவி புறப்படுவான். சீக்கிரம் வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு மாலினியும் கிளம்பு வாள். மாலையில் ரவி, மாலி னியை வரவேற்க இரு கிழ உள்ளங்கள் துடித்துக் கொண் டிருக்கும். ஒவ்வொரு நாளும் ரவி வந்த பிறகே மாலினி வந்து கொண்டிருந்தாள்.

காரணம். பள்ளி முடிந்த தும் சில வீடுகளில் குழந்தை களுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பதாகச் சொன்னாள்.

இப்படியே இருவரும் ஆனந்தமாக வேலைக்குச் சென்று கொண்டிருந்தனர். முதல் மாத சம்பளத்தை பெரி யவர்களின் காலில் வைத்து நமஸ்கரித்து ஆசி பெற்றனர். வறுமையில் வாடி சுண்டி யிருந்தவர்களின் மனமும், முகமும் இப்போது மலர்ந்து தெம்பு படரத் தொடங்கியது.

ரவி தன் வேலையில் ஈடுபட் டிருந்தான். அவனுக்கு சோடா பாக்டரியில் சீசாக் களுக்கு காற்று அடைக்கும் வேலை. அதன்படி செய்து கொண்டிருக்கும் போது தற் செயலாய் ஒரு விபத்து நேர்ந் தது. ஏதோ கவன பிசகில் இருந்த ரவி சீசாவில் காற்று அதிகமாய் விட்டு விட்டதால் சீசா படீரென வெடித்து சிதறி அவன் கை முழுவதும் காயம் ஏற்படுத்திவிட்டது. ரத்தம் ப்ரவாகம்போல் பீறியடித்தது. 'வீல்' என்று ரவி அலறிய அலறலில் பலர் ஓடி வந்தனர். உடனே முதற் சிகிச்சை செய்ததோடு அருகில் உள்ள டாக்டர் ரத்தினத்தின் டிஸ் பென்ஸரிக்குத் தூக்கிச் சென் றனர்.

ரவியைக் கொண்டு கிடத் திய அதே நேரத்தில் ஒரு கருப்புக் கார் வேகமாக வந்து நின்றது அங்கே. அதிலிருந்து ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு அதிவிரைவாக ஒருவர் உள்ளே வந்தார். அவரைக் கண்டதும் ரவியின் கூட வந்தவர்கள் எழுந்து மரியாதை செலுத்தினர். அவர்தான் 'சோடா பாக்டரி' யின் முதலாளி. ரவிக்கு விபத்து நேர்ந்தது அறிந்து தான் வந்தாரோ என நினைந் தனர்.

ஆனால் அவரோ "டாக்டர்! டாக்டர்" என்று அழைத்த வாறு உள்ளே சென்றார். அந்தப் பெண்ணும் அவர் பின் வந்தாள். அவள் கை முழுவதும் தோல் வயன்று காணப்பட்டது.

நடந்துகொண்டேயிருந் தவள் 'ஆ' என வீரிட்டாள்.

ஒருவரும் ஒன்றும் புரியாது விழித்தனர். இந்த குரல் கேட்டு கண் விழித்த ரவி "மாலினீ!" என கூவினான். இது அனைவரையும் இன்னும் வியப்பிலாழ்த்தியது.

மாலினி ஓடி வந்தாள் அருகில். அவர்கள் பேசு வதற்குள் டாக்டர் ரவிக்கு சிகிச்சை செய்யத் தொடங்கி னார். மாலினி டாக்டருடன்

தானும் ரவிக்கு உதவி செய்யத் துடித்தாள். இவள் செய்கையையும், முதலில் வீறிட்டதையும் கண்ட பாக்டரி முதலாளி, சந்தேகம் கொண்டார்.

"ஏனம்மா! உன் கையில் பட்டிருக்கும் அடியைக் கூட பொருட் படுத்தாமல் அவனிடம் என்னம்மா பரிவு உனக்கு. எழுந்திரு...யார் அவன்?" என்றார். மாலினி கண்ணீர் பெருகும் நேத்திரங்களை மேலே உயர்த்தினாள்.

"ஸார்! இவர் யாரென்று உங்களுக்குத் தெரியாது. என் மாமா மகன் ரவி சார்! எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட வறுமையில் நாங்கள் இருவரும் வாடினோம். வருந்தினோம். சிந்தித்தோம். அநாதையான என்னை எடுத்து வளர்த்து, உருவாக்கிய ரவியின் தள்ளாத வயதுடைய பெற்றோரைக் காக்க, அதிலும் குருட்டுதாயை மகிழ்ச்சியூட்ட நினைத்துதான் உங்களிடம் வேலைக்குவந்தேன். வீட்டில், பள்ளியில் வேலை செய்வதாகப் பொய் கூறினேன்" — அதற்கு மேல் அவளை பேசவிடாது விம்மல்கள் தடுத்தன.

"வந்த யிடத்தில் எனக்கு என் போராத வேளை பொங்கும் பாலாக வந்து என் கையைப் பதம் பார்த்தது. இப்போது என் ரவியையும் காணவைத்தது" என்றாள்.

இதுவரையில் மாலினியின் கரத்தை கவனிக்காதிருந்த ரவி "ஐயோ மாலினி! கையில் அடியா? முதலாளி வீட்டிலா நீ வேலை செய்து கொண்டிருந்தாய். நானும் உன்னை,—என் மீது அன்பைப் பொழியும் உன்னை பொய் கூறி ஏமாற்றி விட்டேன். நானும் என் படிப்பிற்குத் தகுந்த வேலை செய்யவில்லை. வறுமைப் பேயின் தூண்டுதலால் சோடா பாக்டரியில் வேலைக்கமர்ந்து இந்நிலைக்குள்ளானேன். கண்ணே! உன்னையும் வருத்தி நானும் அவதிப்படும்படி என் விதி அமைந்திருக்கிறதே" என்று கூறியவாறு கட்டு மீறிய ப்ரேமையின் ஆவேசத்தால் உந்தப்பட்டு, சூழ்நிலையையும் மறந்து மாலினியை அணைத்துக் கொண்டான்.

அவளும் 'ரவி' என மெய் மறந்து முணுமுணுத்தாள்.

இவர்களது வாழ்க்கையின் சாரத்தையும், இவர்களிடையே வளர்ந்துள்ள ப்ரேமை வருக்ஷத்தையும் கண்டு டாக்டரும், முக்யமாக பாக்டரி முதலாளியும் வியந்தனர். அவர்களது ப்ரேமையின் எல்லை முதலாளியை மெய் சிலிர்க்க வைத்தது.

உடனே ரவியைத் தட்டிக் கொடுத்து எழுப்பினார். "உன் தகுதியையும், திறமையையும் அறியாது உன்னைக் கீழ்த்தரமான வேலையில் போட்டுவிட்டேன். நாளையிலிருந்து என் பாக்டரியிலேயே உனக்குத் தகுந்த வேலையை நான ஒதுக்கிவிட்டேன். கவலையின்றி உன் வருங்கால மனைவியை சந்தோஷத்துடன் அழைத்துச் செல்" என்று கருணை வழியும் அன்புக் கட்டளையிட்டார்.

தங்கள் வறுமைப் போர்வையை களைய வந்த தெய்வமாக அவரை எண்ணினர் மாலினியும், ரவியும்.

# ★ சொல்லட்டுமா! ★

**ஹாஸ்ய நடிகர் எல். நாராயண ராவ்.**

எங்கள் ஊரில் வண்டிப் பேட்டை என்னும் இடத்தில் கொட்டகைப் போட்டு நிறைய நாட்கள் ஜமாய்த்தது நாடகம். அந்த நாடகக் குழுவினருட னேயே இருந்தேன் நான். அவர்கள் எங்கள் ஊரிலிருந்து டேராவை வேறூருக்குத் தூக்கிவிட்டனர். எனக்கு துக்கமாயிருந்தது. அவர்கள் நினைவே என்னை வாட்டியது. நாடகக் குழு சென்றுவிட்டது. ஆனால் நான் மட்டும் தங்கிவிட் டேன். கலையே என்னை தள்ளி விட்டதுபோல் வருந்தினேன். அவர்கள் சென்றாலும் அந்த நாடக ஆசை என்னைவிட்டு அகலவில்லை.

நாட்கள் சென்று கொண் டிருந்த வேகத்தில் நாடக ஆர்வம் அதனோடு ஓடிக் கொண்டே யிருந்தது. நாடக விஷயங்களை அறியவே என் காதுகள் துடித்து ஆராய்ந்து கொண்டிருந்த போது கரூரில் 'பெரிய சாமா ஐயர் கம்பனி'' வந்து நாடகம் நடத்தும் விஷயம் சிக்கிவிட்டது. கரூர் செல்ல வழியாது? என்று சிந்தித்தேன். நாம் தனியாகச் செல்வது சாத்தியமா? யாரை சாக்காகப் பிடிக்கலாம் என்று சிந்தித்த என் மூளையில் கெங் கையாடி முதலியார்தான் முன் வந்து நின்றார். என் உள்ளத் துடிப்பை அவரிடம் அறிவித் தேன். மிகவும் நல்ல குணமும், நாடகத்தில் ஆர்வமும் உள்ள அவர் உடனே கிளம்பிவிட் டார். அவரது "டபிள் ஹார்ஸ் போட்ட ஸாரட்'' வந்து நின்றது. ஜம்மென்று ஏறி அவர் அருகில் அமர்ந் தேன். அதில் செல்லும் வேகத்தில் உடலில் உராய்ந்த காற்று உள்ளத்தையும் கிளு கிளுக்க வைத்தது. நாடகத் தைப் பார்ப்பதோடு அதில் நடிக்கவும் முயற்சிக்க வேண் டும் என்ற தீர்மானம் என் மனதில் ஊன்றிவிட்டது.

சாரட் செல்லும் வேகத்தில் என் குடுமி படபட வென்று காற்றில் அடித்துக் கொண்டு பறந்தது. என் மனமும் பட படத்தது. சாரட்டில் போகி ரோம் என்ற பெருமையைவிட நாடகம் பார்க்கப் போகிறோம் என்பதே ஓங்கி நின்றது. வழி யில் நிற்கும் மரங்களெல்லாம் நடிகர்களாகவும், படர்ந்திருந்த செடிகளும் கொடிகளும் கூடி யிருந்த பொதுமக்களாகவும், விரிந்திருந்த ஆகாயம் திரை யாகவும், பறந்திருந்த நிலப் பரப்பு நாடக மேடையாகவும் என் கண்களுக்குத் தோன்றி என்னை முற்றிலும் அடிமையாக் கிக்கொண்டுவிட்டதால் ஆனந் தம் மேலிட்டு "ஹோ......ஆ'' என்று கத்திவிட்டேன். முதலி யார் திடுக்கிட்டு என்னடா தேவு! விழித்துக் கொண்டிருக் கிறாயா? இல்லை, தூங்கி கனவு ஏதாவது கண்டாயா'' என்றார்.

அப்போதுதான் நான் கூவி விட்ட அவமானம் எனக்குத் தெரிந்தது. "இல்லை மாமா! சாரட்டில் போகும் சந்தோஷம்'' என்று அசடு வழிய கூறி என் அசட்டுத்தனத்தை அடக்கி னேன். 'பாவம்! சாரட்டில்

ஏறியறியாத பையன், அது ஆனந்தத்தில் கத்தியது போலிருக்கிறது' என்று நினைத்திருப்பார். உண்மையில் அவர் கேட்டதுபோல் கனவால் எழுந்த சப்தம்தான் அது என்பது அவருக்குத் தெரிய ஹேது இல்லை. அவர் கேட்டது தூங்கி கனவு கண்டாயா! என்பது. ஆனால் நானே கண்ணைக் கொட்டையாக விழித்து கனவு கண்டேன். அவ்வளவு தானே வித்தியாசம்.

இவ்வாறு எண்ணமிட்டவாறு எங்கள் சாரட் கரூரை அடைந்தது. கங்கையாடி முதலியார் என்னை அழைத்துக் கொண்டு போலீஸ் ஸ்ஷேனுக்கு சென்றார். எதற்கோ என்று பயந்து விடாதீர்கள். அந்த இன்ஸ்பெக்டர் அவருக்கு ரொம்ப சிநேகம். நாடகம் ஆரம்பிப்பதற்கு முன்பே போய்விட்டதால் அவருடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கலாம். அங் கிருக்கும் ஒரு, சிகப்புத் தொப்பியை அனுப்பினல் டிக்கட் வந்து விடும். அவர்கள் பேசத் தொடங்கினார்கள். நான் பூனை போல் நாற்காலியைப் பிடித்தவாறு நின்றிருந்தேன். இன்ஸ்பெக்டர் என்னைப் பார்த்துச் சிரித்தார். நானும் பெருமையுடன் இளித்தேன்.

"உட்காரடா தேவு!" என்றார்.

மரியாதையோடு முதலில் ஒரு "பரவாயில்லை" என்று போட்டுவிட்டு பிறகு அமர்ந்தேன். இன்ஸ்பெக்டருக்கு வாண்டுப் பயலான என்னை எப்படித் தெரிந்திருக்கும் என்று உங்களுக்குச் சந்தேகம் எழும். அவர் அடிக்கடி எங்கள் ஊருக்கு வருவார். வரும்போதெல்லாம் அவரைச் சுற்றித் திரியும் அநேக வால்களில் நானும் ஒருவன். நான் சிறிய வயதில் பார்ப்பதற்கு சிகப்பாக கடுக்கன் மின்ன நன்ருக இருப்பேன் என்று முன்பே சொல்லியிருக்கிறேன் அல்லவா! அதன்படி என்னிடம் அவருக்குத் தனிகவர்ச்சி ஏற்பட்டது. பலர் என்னைப் பற்றி கூறியதைக் கேட்டு பாட்டுப் பாடச் சொன்னார். பாடினேன் ஒரு நாள். அதிலிருந்து அவர் ஊருக்கு வரும்போதெல்லாம் எனக்குத் தெரிந்த நாலைந்து உருப்படிகளைக் கேட்டு ரஸிப்பது அவருக்கு ஒரு பொழுது போக்காகி விட்டது.

அன்று கங்கையாடி முதலியார் அவரிடம், நான் நாடகம் பார்க்கத் துடித்ததையும், எனக்காக அவர் புறப்பட்டு வந்ததாகவும், எனது நடிப்பைப் பற்றியும் அடுக்கினார் அவர். நானும் "ஆமாம் மாமா! எனக்கு ரொம்ப ஆசையாய் இருக்கிறது. நான் படித்து உத்தியோகம் செய்யப் போவதில்லை. நடிகனாகப் போகிறேன். நீங்களெல்லாம் தான் உதவி புரிய வேண்டும்" என்று வணக்கத்துடன் சாமர்த்தியமாகப் பேசினேன்.

அப்போது ஒரு ஜவான் வந்து நின்று சல்யூட் அடித்தான். யாரோ வந்திருப்பதை அறிவித்தான். தொடர்ந்து ஒரு பெரிய மனிதர் வந்தார். இன்ஸ்பெக்டரும் மகிழ்வுடன் வரவேற்றார். பேசத் தொடங்கினார். நான் முதலியாரிடம் வந்து "யார் மாமா அவர்?" என்று துளைத்தேன். அவர் கூறியது என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அவர்தான் நாங்கள் பார்க்கப்போகும் நாட

கத்தின் முக்யஸ்தராம். நான் இன்ஸ்பெக்டரிடம் தாவினேன். சந்தர்ப்பத்தை நழுவவிட மன மில்லாமல் பின்னுலிருந்து அரித்தேன். அவர் என் ஆவலை வெளியிட்டார். அந்த முக்யஸ்தர் போலீஸ் உதவி நாட வந்திருந்தார். அதற்காக இன்ஸ்பெக்டரின் வார்த்தை யைத் தட்ட முடியாது செவி சாய்த்து என்னைப் பாடச் சொன்னுர். பொளந்து கட்டி, பிய்த்து வாங்கி விட்டேன். இன்ஸ்பெக்டரிடம் உள்ள தய வுக்காகவும், நான் நன்ருகப் பாடி விட்டதாலும் நம்பிக்கை படர்ந்த உள்ளத்தோடு தன் நாடகத்தில் சேர்த்துக்கொள்வ தாக வாக்களித்தார்.

"ஏண்டா தம்பீ! என்னுேடு வருகிருயா இப்போதே?" என்று கேட்டார் அவர். இந்த கேள்வி எழுமா என்று எதிர் பார்த்து பறந்துகொண்டிருந்த நான் நிற்பேனு. அவர் பின்னு லேயே கிளம்பிவிட்டேன். அவ ரோடு சென்றதில் நாடகம் நன் ருக மேடைமீதிருந்தே பார்க்க முடிந்தது. ஆனந்தம் தாங்க முடியாது எல்லை மீறியது. அவர் நாடகங்களில் பழக்கத் தொடங்கினுர். நொடியில் அவர்கள் வழியைப் புரிந்து கொண்டு நடிக்கத் தொடங்கி னேன். நான் முதன் முதலில் அவர்களோடு நடித்த நாடகம் 'குலேபகாவலி' தான். அந்த நாடகங்களெல்லாம் கரூர் பசு பதீஸ்வரன் ஆலயத்தின் வடக்கு புறத்தில் கொட்டகை போட்டு நடந்தது. கூட்டத் திற்குக் கேட்கவும் வேண்டுமா?

குலேபகாவலியில் நான் மோகினி வேஷம் போட்டேன். எனக்கு ஜோடியாக மோகினி ராஜா வேஷம் போட்டவர் காசி ஐயர். அவர் நடிப்புக்குக் கேட்க வேண்டுமா? 'பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்' என்பது போல் அவரோடு சேர்ந்து நடித்ததில் என்னுடையதும் மெருகு பெற்று நல்ல பெயர் வாங்கிவிட்டேன். நான் அவர் கள் நாடகங்களில், இந்த வேஷம்தவிர சிறிய பையன்கள் மாதிரியும், வேறு சில சில்லரை பார்ட்டுகளிலும் நடித்திருக் கிறேன்.

அவர்கள் கோஷ்டியில் ப்ர பலமான நடிகர்கள், ராஜபார்ட் G. S. முனுசாமி நாயுடுவும், ஸ்திரீ பார்ட் போடும் நடேச பத்தர், பெரிய சாமா ஐயர் முத லியவர்களும் தவிர சுப்பைய்யா செல்லப்பா, காசி ஐயர் ஆவர்.

காசி ஐயர் முன்பு நடிப்புக் கலையில் மட்டும் தன் திறனைக் காட்டி வந்தார். பின்னுல் தமக்கு சங்கீதத்திலும் அபார சக்தி உண்டு என்பதை நிரு பித்துக் காட்டி விட்டார். ஆவ லுடன் ஹார்மோன்யம் பயின் ருர். வித்வத் மகிமையாலும், சாதகத்தின் சிறப்பாலும் இப் போது ஹார்மோன்ய மன்ன னுய் ப்ரகாசிக்கிருர். மன்னன் என்ருல் அந்தப் பதவி அவ ருக்கே தகும். வாசிக்க ஆரம் பித்து விட்டால் கானமிருதம் பொழியும். கேட்பவரை ஒரு தனி உலகிற்கே அவர் இனிய சங்கீதம் தூக்கி சென்றுவிடும். அனைவரும் தலையாட்டி பொம் மைகளாய்தான் மாறி விடுவார் கள். என்ன தாளம்! என்ன ராகம்! என்ன பாவத்தோடு பாட்டின் வார்த்தைகள் முதற் கொண்டு நம் செவிகளில் விழும். அவர் வாயில்தான் பாடுகிருரோ...இல்லை, பிடில் தான்...ஹ-ஹ-ம்...இது புல் லாங்குழலே தான்........இப்படி

(தொடர்ச்சி 24-ம் பக்கம் பார்க்க)

# ஓயாத அலை

— கே. வி. விஜயலக்ஷ்மி —

ராஜம் இப்படி வந்து உட்கார். என்ன ஓயாத வேலையோ உனக்கு. நம் கடைசிப் பெண் கல்யாணத்தோடு மழை பெய்து ஓய்ந்தாற் போல் நம் கவலை, குடும்பபந்தம் எல்லாம் தீர்ந்து விட்டது. ஆபீஸிலிருந்து ஓய்வு பெற்றது போல் குடும்பத்திலிருந்தும் ஓய்வு பெற்று விட்டோம். இனி காசி, ராமேஸ்வரம் யாத்திரையைப் பற்றி யோசிக்கலாம் வா!'' என்று கணபதி தன் மனைவியை அன்புடன் அழைத்தார்.

ஆடி அசைந்து வந்து நின்ற அவர் மனைவி பல்லை இளித்தாள் அவரைப் பார்த்து பிறகு ''ஓய்வா! ரொம்ப சரியான யோசனை. நானும் அதைத் தான் எதிர் பார்த்தேன். ஏன்னா! கடைசிக் கல்யாணத்தோடு கவலையா தீர்ந்தது. கடல் போல் விரிகிறது. காசி, ராமேஸ்வரம் என்று தென்கோடி ஊரையும், வடதேசத்து ஊரையும் எல்லோரும் எப்போதும் பிரிக்காது சேர்த்துச் சொல்வதுபோல் நம்மையும் நம் கவலையும் பிரிக்கவே முடியாது'' என்று நீட்டி மடக்கினாள்.

கணபதிக்கு தன் மனைவியின் பேச்சில் தென்பட்ட சலிப்பு கோபத்தையே கிளறி விட்டது. ''என்ன ராஜம்! இன்னுமா உன் பல்லவி முடிய வில்லை. சரணம் ஸ்வரம் எல்லாம் போடத் தொடங்கி விட்டாய்? என்ன கவலை, தொல்லை நமக்கு. விளக்கு பார்ப்போம்'' என்று சீறினார்.

தன் கணவனது சினத்தைக் கண்டு ராஜம் மனம் வருந்தவில்லை. உள்ளுக்குள் சிரிக்கத் தான் சிரித்தாள்.

''விளக்க வேண்டுமா நான்? என்ன கவலை! என்ன தொல்லை...ஹூம். தினந் தோறும் சமுத்திரத்திற்கு போகிறீர்களே. அங்கு அலை ஓய்ந்திருக்கிறதோ? கேட்கிறேன் சொல்லுங்கள். அது தான் இல்லை. அது தண்ணீர் அலை. நம்மிடம் அடிப்பது சம்சார அலை. அந்த அலை கரையில்தான் அடிக்கும். ஆனால் இது நம் வீட்டிலே உள்ளேயே வந்து அடிக்கிறது. இன்று தாபால்கள் ஒன்றையும் பார்க்காது நன்றாக சாப்பிட்டுவிட்டு காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்து பேச ஆரம்பித்து விட்டீர்களே காசி, ராமேச்வரம் என்று......'' எனக் கூறியவாறு டப்பென்று நாலைந்து கடிதங்களைப் போட்டாள் ராஜம்.

''அம்மாடி! இத்தனை கடிதங்களா? என்னால் படிக்க முடியாது. நீயே கொஞ்சம் படித்துக் காட்டம்மா'' என்று சோர்ந்து விட்டார்.

ஆஹா! அதற்கென்ன படிப்பதற்குத்தானே? நானே படிக்கிறேன். ஒவ்வொரு கடித அலையும் படிக்கிறேன். பிறகு சொல்லுங்கள் ஓய்ந்ததா என்று'' என்று படிக்க வாரம்பித்தாள்.

முதல் கடிதம்:—

அன்புள்ள அம்மா!

நமஸ்காரம். க்ஷேமம்.

183223

நான் தங்கச்சி கல்யாணம் முடிந்ததும் சௌகர்யமாய் ஊர் வந்து சேர்ந்தேன். ஆனல் எனக்கு அசதி அதிகமாய் இருக்கிறது. என் கணவர் கல்யாணம் முடிந்ததும் ஏன் இதற்குள் வந்து விட்டாய். உன்னல் இங்கு ஒரு வேலையும் செய்ய முடியவில்லையே. அங் கேயே இருந்து ப்ரசவத்தையும் பார்த்துக் கொண்டு பிறகு வரு வதுதானே என்கிருர். எனக் கும் என்னவோ இவ்வளவு சீக் கிரமே உடம்புமோசமாய் இருக் கிறது. அதனல் நான் அடுத்த வாரம் புறப்பட்டு வருகிறேன்.

உன் ப்ரியமுள்ள
பெண், சாந்தா.

தன் பெரிய பெண்ணிடமி ருந்து வந்திருந்த கடிதம் முடிந் ததும் கணபதி 'ஐயோ' என்று வலது கையால் வயிற்றில் தட் டிக் கொண்டார்.

இரண்டாவது:—

"என் அன்பான அப்பாவுக்கு வந்தனங்கள். க்ஷேமம்.

என் தங்கை கல்யாணத் திற்கு வாராதது பற்றி ரொம்ப வருந்துகிறேன். காரணம் லீவு கிடைக்காத தொல்லை தான் என்பது நான் கூருமலே உங்களுக்குத் தெரியும். என் னுல் முடிந்தவரை முயற்சி செய்தேன். கடைசி நிமிடம் வரை எப்படியாவது கிடைத் து விடும், வந்து விடலாம் என்று எண்ணி ஏமார்ந்தேன். எனக்கு வர அதிர்ஷ்டம் இல் லைபோல் இருக்கிறது.

நான் முதலில் போட்டதிட்ட மென்ன வென்ருல் கல்யாணத் திற்கு வரும்போது எல்லோ ரையும் அழைத்து வந்து குழந் தைகளை மட்டும் அங்கேயே விட்டு விட்டு நாங்கள் திரும்பி விடுவது என்பதுதான். இங்கு பள்ளி ஒன்றும் படிப்பதற்கு வசதியாகவே இல்லை. படிப் பும் வகையர்க இல்லை. குழந் தைகளுக்கோ வயதாகிக் கொண்டே போகிறது. படிப் பில்லாமல் எத்தனை நாளுக்கு பாழாக்குவது. இதை யெல் லாம் யோசித்து யோசித்துத் தான் அந்த முடிவு செய்தேன். ஆனல் அப்போது ஒன்று நடந்து போய்விட்டது.

இந்த வாரத்தில் என் சிநே கிதர் ஒருவர் நேராக அங்கு நம் வீட்டிற்கு அருகிலேயேவரு கிருர். அவருடன் மாலா, சுந் தர், சேகர் மூவரையும் கூட்டி அனுப்புகிறேன். அங்கு பள் ளியில் எப்படியாவது இடம் வாங்கி சேர்த்து மூவரையும் படிக்க வைக்கும் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்து விட் டேன். எங்களை யெல்லாம் முன் னுக்குக் கொண்டு வந்த ராசிக் காரர்கள்.

பிறகு சில மாதங்கள் சென் றதும் நான் ப்ரயத்தனம் செய் து எப்படியாவது ரஜா வாங் கிக்கொண்டு வருகிறேன். உங் களை யெல்லாம் பார்த்து வெகு நாட்களாகி விட்டனவல் லவா? குழந்தைகளை ரயிலடிக் குச்சென்று அழைத்து வாருங் கள். அம்மாவுக்கு என் நமஸ் காரம்.

உன் அருமைப் புத்திரன்
சுதாகர்.

இரண்டாவது மகன் விடுத்த இந்த கடிதம் கணபதியை இடது கையால் வயிற்றில் 'அப்பா!' அடித்துக் கொள்ளச் செய்தது.

**பி**ரிய அண்ணுவுக்குக் கமலம் அநேக விண்ணப்பம் செய்து எழுதியது. க்ஷேமம்.

முன்பே நாம் பேசிக் கொண்டிருந்தபடி உன் கடைசிப் பெண் கல்யாணத்தோடு என் மகள் கல்யாணத்தையும் சேர்த்து நடத்தி விடுவது என்றுதான் எண்ணியிருந்தேன். ஆனல் அப்போது ஏதோ முடியாமற்போய் விட்டது. வரன்களும் சரியாகக் கிடைக்கவில்லை. அப்போது அவள் அப்பாவிற்கும் முடியவில்லை.

பகவான் அருளால் இப்போது ஒரு நல்ல வரன் படிந்திருக்கிறது. எல்லா விதத்திலும் த்ருப்திகரமானது. கிடைத்தால் அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனல் அந்தப் பையனுக்குபோட்டியும் அதிகமாம். அதனல் அவன் தாயார் வரதக்ஷிணை பேரம் பேசுகிருள். இதெல்லாம் எதற்கு எழுதுகிறேன் என்ருல், நீ அம்மான் சீர் செய்வாயே அந்தப் பணத்தை கையில் ரொக்கமாக முன்னலேயே அனுப்பி விடு, எனக்கோ, பெண்ணுக்கோ புடவை வாங்க வேண்டாம். நகைகளும் வாங்க வேண்டாம். இந்த உதவியை உடனே யோசித்து செய்தாயானுல், கையிலிருப்பதோடு இதையும் போட்டு கல்யாணத்தை கச்சிதமாய் நடத்தி முடிக்கலாம்.

எல்லாவற்றிற்கும் உன்னிடமிருந்து விரிவான பதிலையும், அதே சமயத்தில் மணியார்டரையும் எதிர்பார்க்கிறேன்.

உன் ஆசைத் தங்கை
கமலம்.

"ஐயயோ! இதென்ன புராணம் நீண்டு கொண்டே போகிறதே...மணியார்டர் அனுப்ப வேண்டுமா? இப்போதேவா? இப்படி கேட்டிருக்கிருளே..." என்று அங்கலாய்த்த வாறு டபடப வென்று வயிற்றில் இரு கரங்களாலும் போட்டுக் கொண்டார்.

"சே! நிறுத்துங்கள். கல்யாணம் என்று எழுதியிருப்பதைக் கேட்டுவிட்டு அபசகுணம் போல் வயிற்றில் அடித்துக் கொள்கிறீர்களே. அவர் கேட்டிருப்பதில் என்ன தவறு? நம் பெண் கல்யாணத்திற்கு மட்டும் என் அண்ணனிடமிருந்து பணமாக வாங்கிக் கொள்ள வில்லையா! அதுதான் இவரும் கேட்டிருக்குருர். உடனே யோசியுங்கள் அதைப் பற்றி" என்றுபொறிந்துதள்ளிஞள் ராஜம்.

"தேவதையே! சொற்பொழிவு முடிந்ததாம்மா... மேலே எத்தனே அலைகள் காத்துக்கொண்டிருக்கின்றன.படித்துத் தொலே."

"நம் பாலு மனேவியிடமிருந்து வந்திருக்கிறது அடுத்த கடிதம்."

"ஹ-ம்..." என்று உறுமிஞர் கணபதி.

"**அ**ன்புருவான அம்மாவுக்கு அஞ்சலிகள். க்ஷேமம்.

உங்கள் க்ஷேமத்தையும் அறிய ஆவலாயிருக்கிருேம். கல்யாணம் முடிந்ததும் பெண்ணும் மாப்பிள்ளையும் சௌகர்யமாய் ஊர் போய்ச் சேர்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

கல்யாணத்திற்கு நான்கே நாட்கள் லீவு கிடைத்ததால் என்னேயும் குழந்தைகளேயும் அழைத்துவர முடியாது அவர்

மட்டும் வந்து இரும்பினூர் எனக்கு வராததுமிகவும் குறை. என் மனதெல்லாம் அங்கேயே இருக்கிறது. அந்த குறைதீர உங்கள் பேரப் பிள்ளையின் ஆண்டு நிறைவை ஊரில் பெரியவர்கள் முன்பு கொண்டாட ஆசையாயிருக்கிறது. இந்த மாதக் கடைசியில் அனைவரும் வருகிறோம்.

மேலும் ஒரு முக்ய விஷயம். மூன்றாவது குழந்தை பிறந்த வீட்டில் பிறக்கக் கூடாதாம். புக்ககத்தில் தான் பிறக்கவேண்டுமாம். அதனால் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கு வந்து விட்டு நான் அங்கேயே தங்கி விடுகிறேன். அவர் எழுதச் சொன்னார். "வீட்டில் குடித்தனம் ஒன்று வைக்க வேண்டாம். பிறகு இடம் போதாது' என்று. நீங்கள் குடி வைத்து விடப் போகிறீர்களோ என்று தான் அவசரமாக இதை எழுதுகிறேன். அவருக்குக் கடிதம் எழுத ஓய்வே யில்லை. வேறு விசேஷமில்லை.

உங்கள் நாட்டுப்பெண்
விரஜா.

"என்ன! இடிந்து உட்கார்ந்து விட்டீர்களே? அலை ஓய்ந்து விட்டது. கவலை தீர்ந்து விட்டது. தொல்லை தொலைந்து விட்டது. புறப்படுங்கள் காசி, ராமேச்வரத்திற்கு" என கிண்டினாள் ராஜம்.

ஆனால் ராஜம் எதிர்பார்த்தபடி கணபதி சினம் கொள்ள வில்லை.

"ராஜம்! என்ன இருந்தாலும் பெண்கள்மூளை ஆணுக்கு வராது. நம் குடும்ப அலை ஓயவே ஓயாது. ஓயாது அடித்துக் கொண்டேயிருக்கட்டும். நாம் அணை போட்டுக் கொண்டேயிருக்கலாம். ஒரு கடிதத்திற்கு மேல் ஒன்று போட்டியல்லவா போடுகிறது. நீ இருக்கும் வரை எனக்கு என்ன குறை? சரி...சரி...சீக்கிரம் ஒரு டம்ளர் காபி சுடச் சுடக் கொண்டுவா...அதைக் குடிப்பதற்குள் ஒருஅலை அடிக்கப் போகிறது. கதவை முன் ஜாக்கிரதையாகப் போடு...சீக்கிரம் ராஜம் சீக்கிரம்" எனக் கூறி சிரித்தார் கணபதி.

● ● ●

---

(20-ம் பக்கத் தொடர்ச்சி)

பொது ஜனங்கள் எது என்று கண்டுபிடிக்க முடியாது திணறும்வாறு வாசித்து அவர் அப்ளாஸ் வாங்கியது கணக்கில் கூற முடியுமா?

சமீபத்தில்கூட காயனபடு கீர்த்தனபடு ஸி. ஸரஸ்வதிபாய் அம்மையாரின் காதா காலக்ஷேபத்தில் ஹார்மோனியம் வாசித்தார். அங்கு உட்கார்ந்து ரஸித்த மக்களில் வயதானவர்கள் முன்பு அவர் நடித்த நாடகத்தையும், பலருக்கு ஹார்மோனயம் வாசித்ததையும் பற்றி பேசி அளவளாவினர்கள். கிட்டப்பாவின் நாடகம் காசி ஐயரின் பின்பாட்டு ஹார்மோன்யம் என்றால் ஒரு மனி. மவுசுதான். அவர் ஹார்மோன்யத்தில் கைவைத்து விட்டால் போதும். நர்த்தனம் செய்யும் அழகைப் பார்த்து மயங்குவதா? அதிலிருந்து எழும் கானத்தை ரஸிப்பதா? என்பது தெரியாது. அப்படிப் பட்ட மகா வித்வான். அந்த வாத்தியத்தில் அவருக்கு நிகர் அவர்தான் என்றே சொல்லலாம். எங்கு கச்சேரி நடந்தாலும் முதல் ரஸிகனாக நான் அமர்ந்திருப்பேன்.

(தொடரும்)




மேலும் உணர்ச்சி வேகம் தூண்ட "மாமா! சோடா வாட்டர் காஸ் உடைத்த உடனே போய்விடுகிறது. பிறகு அந்தத் தண்ணீர் எதற்கு உபயோகம்? அதுபோலத்தான் ஆத்திரப்புத்திக்கு மனிதன் அறிவை இறையாக்கி விடக் கூடாது. நான் தங்களுடைய இந்த ஒரு யோசனைக்குச் சற்றும் ஒப்பவே மாட்டேன். திருட்டுத்தனத்தில் நித்யமான இன்பத்தைக் காணமுடியாது. மனத்தில் உள்ள லக்ஷயத்தை நிறைவேற்றமுடியாது. அத்தகைய காரியம் செய்தால் நிரந்தரக் கைதியைப் போலத்தான் எங்கள் கதியாகும் என்பது என் துணிவு. ஆகையால்...."

என்று அகல்யா தன்னை மீறிப் பொங்கிவரும் ஆவேச உணர்ச்சியில் ஒரு பெரிய மேடைமீது நின்று பேசுவது போல் பேசும் அழகையும், ஆணித்தரமான சொல்லழகையும் கண்டும் கேட்டும் சந்திரசேகரன் தான் ஒரு பெரிய கூட்டத்தில் ப்ரஸங்கம் கேட்பதுபோன்ற உணர்ச்சியே அடைந்து கடகடவென்று தன் கைகளைத் தட்டி "பேஷ்! பலே! பலே"....என்று ஆர்ப்பரித்துவிட்டார்.

இதைக் கண்டபிறகுதான் அகல்யாவின் அடங்காத மனக்கொந்தளிப்புச் சிறிது அடங்கி சடக்கென்று தூக்கி வாரிப்போட்டது. முகத்தில் ஒருவிதமான வெட்கமும் அச்சமும் தோன்றி முகம் சுருங்கியது. உடனேபேச்சை நிறுத்திவிட்டு, "மாமா! மன்னிக்கவேண்டும். கட்டுப்படுத்த முடியாத காட்டாற்று வெள்ளம்போல் எழுந்து என்னையறியாத உணர்ச்சி மூழ்கடித்துவிட்டதால் என் நிலையையும், இருப்பிடத்தையும் மறந்து பேசிவிட்டேன். அம்மா! நீயாவது என்னைத் தடுத்திருக்கக் கூடாதா?" என்று தலை குனிந்தபடி கேட்டாள்.

இதயத்தைப் பீறிக்கொண்டு வரும் ஆனந்த உணர்ச்சியுடன் சந்திரசேகரன் அகல்யாவின் தலையைத் தடவி

ஆசிகூறி வருடியபடியே, "அகல்யா! செல்வீ!....உன்னுடைய பேச்சின் அபாரத் திறமையைப்பற்றி எங்கள் பள்ளிக்கூடத்து தலைமை உபாத்யாயர் அடிக்கடி கூறி பூரிப்பார். நீ ஏதேதோ கூட்டங்களில்—முக்யமாகப் பெண்களின் கூட்டங்களில் பேசியிருக்கிருயாம். பள்ளிக்கூட விழாக்களில் பேசியிருக்கிருயாம். அவர்கள் கேட்டுவிட்டு ப்ரமாதமாகச் சொல்லும்போது விஷய வாஸனையே அறியாத எனக்கும் உத்ஸாகப் மேலிட்டுக் கேட்கவேண்டும் போலிருந்தது. இத்தகைய ரத்தினம் என் பாஸ்கரனின் வாழ்க்கைத் துணைவியாகப் போவதை எண்ணி எண்ணி நான்பூரித்து முடிவதற்குள் இப்பைசாசத்தினுல் இத்தகைய பிளவுகளும், பேரிடி மின்னலும் வந்துவிட்டதே என்று நான் துடிதுடித்தேன். உன்னையும் என்னையும் அறியாமல் இத்தகைய ஒரு சொற்பொழிவை பகவான் அளித்து என் குறையைத் தீர்த்ததை எண்ணிப் பூரிக்கிறேன். வருந்தாதேயம்மா'' என்ருர்.

"அகல்யா! நோயாளியாயுள்ள பூமாவுக்கு உன் ப்ரஸங்கம் பரம அவுடதம்போலாகி எத்தனை இன்பமாய்க் கேட்டாள் தெரியுமா? அந்த நல்ல பலனை உத்தேசித்துத் தான் நான் வாளாவிருந்தேன். தவிர என் கண்மணியான நீ எத்தனை அரிய விஷயங்களைக் காவியப் பூங்காவில் புகுந்து பரித்துச் சேகரித்திருக்கும் அழகை—ஆர்வத்தைக் கண்டு மனமகிழ்ச்சியடைந்து உன்னைத் தடுக்க மனம்வராதிருந்து விட்டேன். நோயாளிகளுக்கு டாக்டர் மருந்துகள் கொடுத்து, ஊசி குத்திப் பலவிதமான சிகிச்சைகள் செய்வதுடன் உயர்ந்தகருத்துள்ளவர்களின்பேச்சு சிறந்த நீதி, அனுபவ ஞானமும் நீ கருதும் புத்தகங்கள். அர்த்த புஷ்டியும் ஆனந்தமும் நிறைந்த இனிய சங்கீதம். பச்சைப் பாலகர்களின் விசித்திரமான விளையாட்டு, கண்களையும் கருத்தையும் ஒருங்கே கவரும் சித்திரங்கள் இவைகள் மூலம் நோயாளிகளுக்கு நல்ல அவுடதத்தைவிடச் சிறந்ததையும் கைமேல் பலனையும் காணலாம்....என்று ஒரு டாக்டர் பேரிய கூட்டத்தில் பேசியதை கேட்ட நிலை வந்துவிட்டதால் பூமாவுக்குச் இச்சமயம் இத்தகைய அவுடதத்தினுல் கைம்மேல் பலன் கிடைக்கும் என்றதனுலேயே உன்னைத் தடுக்கவில்லை அகல்யா. கோபிக்காதேம்மா"...என்று சாந்தமாகக் கூறினுள்.

பூமாவின் உணர்ச்சியை எந்தப் பதத்தைக்கொண்டு விளக்குவது என்பதே தெரியாமல் தனது ஸகல பாதைகளையும், கவலைகளையும் மறந்துபோய் தேன்குடித்த நரி போல் அகல்யாவின் சொல்மாரியில் நினைந்து மூழ்கிவிட்டிருந்தாள். எல்லோரும் பேசித் தனது உணர்ச்சிகளைத்

தெரிவித்தார்கள். பூமா அகல்யாவை இருகக்கட்டியணைத்து தன் ஆனந்தத்தைத் தெரிவித்து அகன்ற விழிகளால் அவளை நோக்கினள்.

---

## 14

### அளிந்த புண்ணில் அம்பு பாய்ந்தால்....

ஸேதுராமன் எத்தனை கூப்பிட்டும் பாஸ்கரன் வீட்டிற்கு வருவதற்கு இசையவே இல்லை. அளிந்த புண்ணாகிக்கிடக்கும் அவன் இதயத்தைப் பின்னும் புண்ணாக்கி வருத்த அவர் இசையாததால் விதியே என்று தானும் உட்கார்ந்திருந்தார். பூமாவைத் தக்க முறையில் தன் வீட்டில் கொண்டு விட்டுவிட்டுச் சரியான ஒரு ப்ரத்யேக நர்ஸை அவளுக்குச் சகல பணி விடைகளையும் செய்யும்படி ஏற்பாடு செய்துவிட்டு அகல்யா ஆஸ்பத்திரிக்கு ஓடிவந்தாள்.

தொங்கிய தலையும், மங்கிய முகமும், ஏங்கிய பெருமூச்சும், தாங்கிய துயரமும் ஒரே உருவாய் விளங்கும் பாஸ்கரனின் பரிதாபம் அவளால் தாங்கமுடியவில்லை. தன் பிதாவை நோக்கினள்..."அம்மா! அவரை நாம் இச்சமயம் வலுக்கட்டாயம் செய்து வருத்தக்கூடாது. சற்று விட்டுத்தான் பிடிக்கவேண்டும். அவருடைய இதயம் படும் பாட்டை முகரேகை எத்தனை பளிங்குபோல் எடுத்துக் காட்டுகிறது பார்த்தாயா! ஆகையால் நாம் இங்கேயே இருப்போம். அவருடைய இதயப் புயல் சிறிது ஓய்ந்த பிறகு பேசுவோம்" என்று பெண்ணைத் தேற்றிய ஸேதுராமன் கைகளைக் கட்டிக் கொண்டு அங்கு மிங்கும் உலாவினர்.

அகல்யா வைத்த விழியை வாங்காது பாஸ்கரனையே நோக்கி அவனழகை அள்ளிப் பருகியவாறு உட்கார்ந்திருந்தாள். மணியோ தன் கடமைகளைக் கர்மவீரன் போல் செய்துகொண்டு ஓட்டமும் நடையுமாகச் சென்று நடுநிசி ஒரு மணியடித்தது. அதற்குள் டாக்டர் அகிலாண்டம்மாளைப் பலதரம் வந்து பார்த்துவிட்டுப் போனர்.

பிம் மாலை மூன்று மணி சுமாரிருக்கும். "சேஷகிரி.... பாஸ்கரா...நான் எங்கே இருக்கிறேன்....நீங்கள் எங்கே.... சோர்வுற்று மவுனமானள். பாஸ்கரன் மட்டும் ஓடிவந்து

தாயின் பக்கத்தில் அமர்ந்து "அம்மா....அம்மா... இதோ உன்பக்கத்திலேயே இருக்கிறேன். அண்ணன் கூட இதோ இருக்கிறான். நீ நம்ம வீட்டில்தானிருக்கிறாய்"...

சிறிது நேரங்கழித்து "ஹா!...வீட்டிலா?....ஜட்கா வண்டி...குதிரை....சேஷகிரி....ஐயோ! அந்தச் சண்டாளப் பெண் பூமா"...மறுபடியும் சோர்வு மவுனம். பாஸ்கரா!... நிஜமாகச் செல்லு. நான் நம்ம வீட்டிலா?....ஐயோ கண்ணே தெரியவில்லையே! ஒரே இருட்டாக இருக்கிறதே! இப்போது இரவா பகலா?"...சோர்வு. "பாஸ்கரா....அந்த அனுமதேயப் பிண்டம்...தாசி மகள்....ஐயோ! கண் ஏன் தெரியவில்லை?" மவுனம்...

"அம்மா! சற்று முன் ஒரு பெரும் புயலுடன் கூடிய விஷக்காற்றடித்தது. அதனால் எங்குமே இருள் அந்தகாரமாகச் சூழ்ந்துவிட்டது. எங்களுக்குக்கூட கண்ணே தெரியவில்லை. இப்போது நல்ல நடுநிசி இரவுதான். இருப்பினும் இருள் மூடிவிட்டிருக்கிறது."

"ஹா! நடுநிசியா? பாஸ்கரா....விஷக்காற்று அடித்து எல்லோருக்குமே கண் தெரியவில்லையா? இதென்ன விளையாட்டா"....

"அம்மா! விளையாட்டு, வினையாட்டு எல்லாம் இரவுபகல் போலத்தானே வருகிறது. நீ பேசாமல் படுத்திரும்மா... இந்த விஷம் நீங்கி நல்ல காற்று வந்தால் அப்போது இருள் தானாகவே நீங்கிவிடுமாம். ஆகையால் உடம்பை அலட்டிக்கொள்ளாதேம்மா"...

"பாஸ்கரா! அந்தப் பாவிப்பெண்...அனுமதேயப் பெண்...தாசிமகள் ... ஜட்காவண்டி....ஐயோ! உடம்பெல்லாம் வலிக்கிறதே! இதென்னடா பாஸ்கரா"...

"ஒன்றுமில்லையம்மா. விஷப்புயலடித்த அந்தகாரத்தின் வேகம். எல்லோருக்கும் கண்ணவிழ்ந்து விட்டது. நீ யாரைப்பற்றியும் பேசாதே. நானும் அண்ணாவும் உன் பக்கத்திலேயே இருக்கிறோம்"....

"அண்ணா ஏண்டா பேசவில்லை. கண்ணா...சேஷகிரி.... சேஷகிரி...இதோபாரு"...

"அம்மா! உனக்குக் கண் மட்டும் இருண்டிருக்கிறது அண்ணாவுக்கு விஷக்காற்றடித்து வாய்கூட பேசமுடியவில்லை. பதுமைபோலிருக்கிறான். கிழக்கு வெளுக்கட்டும். சகலமும் சரியாகிவிடும். பேசாமலிரு...டாக்டர்களுக்கும் கண் தெரியவில்லையாம். அவர்களும் வரமாட்டார்கள்" ....

“பாஸ்கரா! இந்தமாதிரி ஒரு காற்றடித்து என் ஜென்மத்திலேயே நான் பார்க்கவில்லையேடா... இதென்ன புதுமை! என்னை நீங்கள் கேலிசெய்கிறீர்களா? அடியே... பூமா”....என்று கத்தினள்.

பாஸ்கரனின் மனக் கொதிப்பில் பெத்த தாயார் என்கிற பாசம் எங்கேயோ சிறிது ஊசலாடிய போதிலும் அவளால் விளைந்த அநர்த்தத்தினல் மனது சிதறிப்போய் விட்டதால் அந்த உணர்ச்சியின் மிகுதியினலேயே சமயோசிதமான வார்த்தைகளைக் கொட்டி அவளைச் சமாதானம் செய்து வந்தும் இந்தநிலையிலும் தொண தொண வென்று க்ரூரமான வார்த்தைகளையே கேட்டு வதைப்பதால் அவனுக்குப் பின்னும் கொதிப்பாகவே ஆய்விட்டது. அந்த ஆத்திரத்தின் வேகத்தில் எப்படியோ துணிந்து தைரியமாக “அம்மா! நீ ஏன் சும்மா கத்துகிருய். விஷக்காற்றடித்ததில் உலகத்திலேயே அனேகம்பேர் செத்துவிட்டார்கள். அதில் பூமா முதலியவர்களும் செத்துப்போய்விட்டார்கள்!”

என்று முடிப்பதற்குள், “என்ன! என்ன! அந்தப் பாழும் பெண் செத்துவிட்டாளா? நிஜமாகவா செத்தாள். அடடா! கடவுளுக்குக்கூட கொஞ்சம் புத்தியிருக்கிறது... ஏண்டா தலைமுழுக”...மவுனம். இந்தக் கட்டத்திற்குப் பின் வெகுநேரம் மவுனமே குடிகொண்டது. சுமார் அறை மணிநேரங் கழித்து மருபடியும் பேசத்தொடங்கினள். “பாஸ்கரா! சேஷகிரிக்கு வாயா அடைத்துவிட்டது. ஐயயோ...ஜட்காவண்டியிலல்லவா போனன். நீ ஏன் பொய் சொல்கிருய். இதோ பாரு பாஸ்கரா! நான் உன்னைப்பெத்த தாயார்,”

“ஆமாம். சாக்ஷாத் பெத்ததாயார்தான். யாரில்லை என்று சொன்னர்கள். மருபடியும் இத்தகைய விஷக்காற்று அடித்தால் என்ன ஆகும் தெரியுமா? எல்லோருக்குமே கோவிந்தாதான். பேசாமலிரு. உனக்குக் கண் தெரிந்த பிறகு பேசலாம்: இப்போது வேண்டாம். தலைமுழுக்கு எல்லாவற்றிற்கும் சேர்த்துப் போட்டுவிடலாம் தெரியுமா?”

இதற்குமேல் அவனல் இந்த உபத்திரவம் சகிக்க முடியவில்லை. டாக்டரிடம் சொல்லி மருபடியும் மயக்கமாக்கிவிடவே எண்ணினன். ஆனல் அதனல் என்ன கெடுதலாகுமோ என்ற எண்ணத்தினல் தலைவிதியே என்று உட்கார்ந்திருந்தான். அகிலாண்டம்மாளின் எந்த பிதற்றலுக்கும் வாய்கொடுக்க வேண்டாம். தோன்றுகிறபடி உளறட்டும் என்று பேசாதிருந்துவிட்டான்.

"பாஸ்கரா...பாஸ்கரா....நான் கேட்பது உன் காது கேட்கவில்லையா? நீயும் உன் மனைவியும்....ஏன் இனி சேஷகிரிகூட அவனும் அவன் புதுமனைவியும் மாலையுங் கழுத்துமாக நின்று நான் பார்க்க வேண்டுமடா. பூமாவின் பிசாசு என்னை விழுங்கிவிடுகிறேன் என்று பயமுறுத்துகிறது. ஐயயோ! அதோபாரு. பூமாவின் பிசாசு....பாஸ்கரா... என் வார்த்தையைக் கேளுடா! இனி அந்த அனுமதேயப் பிண்டத்தை நீ மனத்திலும் நினைக்கக்கூடாது. அந்த ஆசையை விட்டுவிடடா. அவளை மணப்பதில்லை என்று எனக்கு உறுதிமொழி கொடு. உம்...கொடுடா. கட்டாயம் நீ அவளை மணக்கக்கூடாது."

பாஸ்கரனை ஒருமுழம் தூக்கி வாரிப்போட்டது. தன்னைப் பற்றிஎறிவதுபோன்ற உணர்ச்சியும் ஆத்திரமும் உண்டாகியது. ஐயயோ! இந்த விபரீதத்திற்கு என்ன சொல்வது என்று திகைத்தான்.

அசையாப் பதுமைபோல் உட்கார்ந்திருக்கும் அகல்யாவின் காதிலும் இச்சொல் விழாமலில்லை. இரும்பைக் காய்ச்சித் தன்மீது ஊற்றியதுபோன்ற வேதனையை அடைந்த அகல்யா விசும்பிவிசும்பி அழுவதையும் தேகமே குலுங்குவதையும் கண்ட பாஸ்கரனின் நிலைமையை வர்ணிக்கமுடியுமா? கண்களோ அருவி! இதயமோ இடியும் புயலும் சேர்ந்து வதைக்கும் வானமாகிவிட்டது. தாயை ஒருமுறை பார்க்கிறான். அகல்யாவை ஒருமுறை பார்க்கிறான். இருண்ட வானம் இருண்டே போய்விடுமா? கிழக்கு வெளுக்குமா? தாயா தாரமா? காதலா கடமையா? அன்னை சொல்லுக்கு ப்ரதானங்கொடுப்பதா? சொந்த உணர்ச்சிக்கும் வாழ்க்கைத் துணைவிக்கும் ப்ரதானங்கொடுப்பதா? பாவி.. தாய்சொல் துரந்தொரு வாசகமில்லை என்றதைப் படித்திருந்தும் தாயைப் பேயாகக் கருதிவிட்டானே என்று உலகம் உள்ளளவும் தூற்றுமா? ஏன் சண்டாளன் ஒரு பெண்ணின் வாழ்வையே...அவளுடைய குடும்பத்தையே நாசமாக்கிவிட்டானே. படித்த முட்டாள். இவனைப்போல் உலகம் கண்டேயிருக்காது என்று ஏன் பழிக்காது? இடித்துக்காட்டாதா? இந்த தர்மசங்கடமான நிலையைக் காண நான் என்ன பாவத்தைச் செய்தேனே. என்னுடைய இதயம் இப்படியே நின்றுவிடக் கூடாதா?...

என்று பலபலவிதமாக எண்ணிக் குமுறும் பாஸ்கரனுக்குத் தாயின் கேள்விக்குப் பதில் சொல்லமுடியாத ஆத்திரம் எரிமலையைப்போல் குருக்கிட்டது. மதில் சுவற்றின்மீது உட்கார்ந்துள்ள பூனை எந்தப்பக்கம் குதிக்குமோ என்கிற விபரீத உணர்ச்சி அவனைச் சுற்றிக்கொண்டு

வாட்டும் வேகத்தில் தாயை தனக்கொரு பெரும் ராக்ஷஸி போலவே தன் இன்பவாழ்வைக் கெடுத்து எக்காளமிட்டுத் தன்னைப் பழாக்கவந்த பெரும் பேயைப்போலவே எண்ணினன்.

"ஏண்டா! பாஸ்கரா! நான் பிழைப்பேனே மாட்டேனே. சாகும்போதும் எனக்கு நிம்மதியை உண்டாக்க மாட்டீர்களா! நான் பிழைப்பதாயிருந்தாலும் என்னுடைய வேதனையைப்போக்கமாட்டீர்களா. ஐயோ! அந்த அகல்யா மீது உன் மனத்தை வைக்காதேடா. அவளுடைய பிதா தாசிக்குப் பிறந்த பாவியாமேடா. அந்த அகல்யா யாரோ கெட்டுப்போன பாவி பெற்றுப் போட்டுவிட்டுப் போன அனுமதேயமாம். நம்ம குடும்பத்தை வேரோடு பாழடித்துவிடாதே. அவளை மணக்கமாட்டேன் என்று சொல்லுடா"...

"அம்மா... இந்தச் சண்டாள மகன் உயிருடன் இருந்தால்தானே உனக்குத் துன்பம், அவமானம் எல்லாம். இந்த அபாக்கிய மகன் பிறக்கவே இல்லை என்று எண்ணிவிடு. உனக்கு வாக்குறுதியைக் கொடுக்க என் தேகக் குருதி எல்லாம் கொதித்து, நீராகி நெருப்பாகிக் கருகிச் சாம்பலாகிவிட்டது. பெத்த மக்களின் சுகபோகத்தைத் தேடித்தருவது பெற்றோர்களின் கடமை என்பது உலக மொழி. ஆனல்....ஆனல் இந்தப் பாவிக்கு அது நஞ்சாகி விட்டது, வாழ்வை வெறுத்தவனிடம் குடும்ப வளத்தை, குடும்ப வ்ருத்தியை நீ கனவிலும் காணமுடியாது. உன்னுடைய கருங்கல் நெஞ்சுறுதியுடன் கேட்ட கேள்விக்குப் பதிலும் சொல்லமுடியாது பெண் ஜென்மம் எடுத்தவர்களைப் பொருமைக்கிருப்பிடம், தர்மதேவதை, தயாநிதி, குணக் குன்று, குடும்பவிளக்கு என்றெல்லாம் பறைசாற்றி முறை இடும் இப்பரந்த பாரதநாட்டில், அத்தனைவிதமான பெயர்களை அறுத்து எறிந்து பஸ்மமாக்கும் ஒரு பெண்ணுருவத்தின் மூலம் மூத்த மகன் பயித்தியம், மருமகள் கொத்துயிர் கொலை உயிர் வாழ்வு. கட்டிய கணவன் பாக்குவெட்டி மத்தியில் நெறிக்கும் அவஸ்தை, எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல் இளையமகன் அகால மரணத்தினல் மறைந்தான். நிரபராதியான ஒரு குடும்பம் நாசமாகியது என்றே உலகம் உள்ளளவும் தூற்றிக் காரி உமிழட்டும். கைதட்டி நகைத்து ஏசிப் பேசி எக்காளமிட்டுச் சிறிக்கட்டும். அம்மா! உனக்கு பாஸ்கரன் என்கிற பிள்ளையே இல்லை. அவன் இறந்தான். மாண்டுமறைந்தான் என்று நிம்மதியானமனத்துடன், சாகலாம்; பிழைக்கலாம். எதுவாயினும் செய்யலாம்"....

என்று கட்டுமீறிப் பெருக்கெடுத்தோடும் காட்டு வெள்ளத்தைப்போல் சொல் வெள்ளம் பொங்கிப் பிரள்வதைக் கேட்ட அகல்யாவின் உள்ளம் தீக்குளித்ததுபோலாயிற்று. கணநேரம் யோசனை செய்தாள். மின்னல்போல் துள்ளி எழுந்தாள். அகிலாண்டம்மாளின் கைகளைப் பிடித்துக் கொண்டு, "மாமீ! நீங்கள் இதயபூர்வமாகச் சபித்து வெறுக்கும் துர்ப்பாக்கியப் பிண்டமாகிய அகல்யா பேசுகிறேன். உங்கள் மகனை மணப்பதில்லை என்று நான் உறுதிசெய்து கொடுக்கிறேன் மாமீ....கையைக் காட்டுங்கள்" என்று கூறியதைகேட்டஅங்குள்ள அத்தனை பேர்களும் ப்ரமித்துத்தம்பித்து நடுங்கித் துள்ளினர்கள். பாஸ்கரனல் இந்தப் பரிதாபத்தைக் கண்டு சகிக்கமுடியாது துள்ளிக் குதித்து ஓடி, "நிறுத்து அகல்யா நிறுத்து! என்மீது உனக்குக் கடவுளறிய ப்ரேமை பரிபூரணமாயிருப்பது உண்மையாயின் உடனே உன் வீட்டிற்குப் போய்விடு. வா இப்படி" என்று கண்ணிமைக்கும் நேரத்திற்குள் கூறியபடியே அகல்யாவை தரதரவென்று இழுத்துக்கொண்டு வந்து அவள் பிதாவிடம் விட்டு விட்டு குட்பை...குட்பை" என்று வெறிபிடித்தவன் போல் கத்தியவாறு அந்த இருளையும் கிழித்துக்கொண்டு ஓடினன். "பாஸ்கர்....பாஸ்கர்!" என்று அகல்யா கூப்பிடும் குரலும், அவளுடைய விம்மலும் அந்தக் கட்டிடம் பூராவும் எதிரொலித்து ரீங்காரம் செய்தது.

'பெத்தமனம் பித்து பிள்ளைமனம் கல்லு' என்பார்கள். அந்தப் பழமொழி இந்த இடத்தில் அடியோடுதலை கீழாகிவிட்ட அதிர்ச்சியை ஸேதுராமனல் தாளவே முடியாது வியந்து வருந்தினர். அகல்யாவின் நிலைமையும், பாஸ்கரனுடைய நிலைமையையும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் அவருக்குத் தெரிவதால் அவருடைய விசனம் அதிகரித்து வாட்டியது. "அப்பா! அவர் எங்கு போகிருர். தயவுசெய்து பார்த்துக் கூப்பிடுங்களேன்....அப்பா!"

என்று கதறும் அகல்யாவைக் கட்டிப் பிடித்துச் சமாதானம் செய்து நேரே வண்டியில் கொண்டு உட்கார வைத்துவிட்டுப் பிறகு டாக்டரிடம் தாங்கள் போவதாகவும், பேஷண்டு ஏதேதோ தாருமாருகப் பேசுவதால் இங்கிருப்பதில் பேஷண்டுக்கே நலங் கெட்டுவிடும் என்றும், ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளும்படி நம்பிக்கையான பொய்யைச் சொல்லிவிட்டு காரில்வந்தமர்ந்தார்.

"அப்பா, நேரே ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய்ப் பார்க்கலாமா? அவர் கிடைத்தற்கரியதான மாணிக்கம். கை நழுவிவிட்டால்... அப்பா!....நான் அவரை பிறர்மனம்

நோக மணந்துகொண்டு வாழ விரும்பவில்லை. எனினும் அவர் ஆயிரங்காலம் இவ்வுலகில் வாழ்ந்திருந்தால் அது போதுமப்பா...அப்பா! காரை நேரே ஸ்டேஷனுக்கு விடுங் களப்பா!'' என்று விம்மினுள் அகல்யா.

அவர் இதயம் வெடித்துவிடும்போலாகிவிட்டது. மெல் லச் சமாளித்துக்கொண்டு "செல்வீ! இப்போது அவருக்கு எந்த வண்டியும் கிடையாதம்மா. அவரென்ன முட்டாளா? எத்தகைய வைராக்கியத்துடன் மனத்தை முறித்துக் கொண்டு போயிருக்கிருர் என்பதை நானறியமாட்டேனு! அத்தகைய சிறந்த புத்திசாலியான அவர் தன்னைப் பின் தொடர்ந்து யாராவது வந்து தேடும்படி ஸ்டேஷனுக்கு ஒருநாளும் போயிருக்க மாட்டார். அவர் அத்தகைய மூட் டாளல்ல. அதோடு என் வார்த்தையை நம்பும்மா அகல்யா! அவர் எங்கே தற்கொலை செய்துகொண்டு விடு வாரோ என்று நீ பயப்படுகிருய் பாரு. அம்மாதிரி அசட் டுக்காரியம், ஆத்திரபுத்தியுடன் செய்யவே மாட்டார். காதலுக்காக ஒரு பெரிய படிப்பாளி உயிரைவிட்டானும். பெத்த தாயைவிட இந்தச் சிற்றின்பமா ப்ரதானம் என்று உலகம் தூற்றும்படி ஒருபோதும் நடக்கமாட்டார்."

"ஐயோ! இதை எப்படியப்பா சொல்லமுடியும். தற் போது என் மனம் கொதிக்கும் கொதிப்பு''...இடைமறித்து கண்மணீ! அடிபட்டுக் கிடக்கும்போது ஒருவன் தான் இறந்துவிட்டதாகக்கூட நினைத்துவிடுவான். அது சகஜம். அதுபோல் இது இதயத்திற்குள் பட்டுள்ள பலமான அடி யாகையால் நீ நினைப்பது சகஜம். ஆனல் விவேகத்தை மதியூகத்தை எண்ணிப் பார்க்கும்போது இந்த அதிர்ச்சி தானுகக் குறைந்துவிடும். இது உலகம் கண்டறிந்த உண்மையம்மா....இதோபாரு அகல்யா! நான் என்ன பாடாவது பட்டு அவர் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்து உனக்குக் களிப்பை ஊட்டுகிறேன். சரிதானே?''

களிப்பையா ஊட்டப்போகிறீர்கள் அப்பா! இனி இந்த ஜென்மத்தில் களிப்பு என்பதை கனவில்தானப்பா காண வேண்டும். அவர் உயிருடன் வாழ்வதைக் கேட்டால் அது தான் எனக்குக் களிப்பு. அப்பா! ஒரே ஒரு பயங்கரமான சந்தேகம். அதை விளக்கவேண்டும். அவருடைய தாயார் கேவலம் வரதக்ஷிணைக்கு மட்டும் இத்தனை தூரம் அசுர காரியத்தைச் செய்து தன் குடியைத் தானே கெடுக்க முன் வருவாளா? அந்த ஒரு காரணமும் கூடசேர்ந்தது என்று தான் நான் நினைக்கிறேன். எந்தப் படுபாவியோ உங்களை தாசிமகன் என்றும் என்னை அனதை என்றும் இழிவுபடுத் திக்கூறி ஏற்கெனவே கலங்கியுள்ள மனத்தை இன்னும்

குழப்பிவிட்டிருப்பதுதான் முக்ய அதிர்ச்சிக்குக் காரணமாயிருக்குமென்று நான் நினைக்கிறேன். இத்தகைய அபாண்டத்தை...அப்பா....ஏன் இப்படி நம்தலையில் தூக்கிப்போட்டிருக்கிறார்கள். நீங்கள் தாசி மகனா! உண்மையாகத் தாசி மகனா! சொல்லுங்களப்பா...நான் எந்தக் குப்பைத்தொட்டிகளிலாவது கிடந்த அனாமதேயமாப்பா! ஐயோ! ஏனிந்த மவுனம். அப்பா.. அப்பா....சொல்லுங்களப்பா!" என்று தந்தையின் தோள்களைப்பிடித்து உலுக்கிக் கேட்டாள்.

காரைவிட்டிரங்கி ஆளை கதவை தறக்கசெய்து இருவரும் நேரே மாடி திறந்தவெளி வராண்டாவுக்குச் சென்றார்கள். பூமாவிடமே ஐக்கியமாகி அன்பைச் சொரியும் வண்ணம் லீதம்மாள் அமர்ந்திருந்ததால் இவர்கள் வந்ததே அவளுக்குத் தெரியாது. சாதாரண மனத்திற்கே சிறிது அதிர்ச்சி ஏற்படக்கூடிய சம்பவம் நிகழ்ந்துவிட்டால் அதையே தாளாது நெஞ்சம் குமுறித் துடிக்கும். அதோடு தன் வாழ்வின் இன்பத்தையே சிதைத்துத் தள்ளக்கூடிய ஈட்டி முனையின் கூர்மையைவிட இன்னும் கொடிய அதிர்ச்சி ஏற்பட்டுவிட்டதோடு தன் பெற்றோரின் வாழ்வையும் பாதிக்கக்கூடிய சுடுசரம் போன்ற சொல்லம்பின் தாக்குதலால் தான் அபரிமிதமான அதிர்ச்சியை அடைந்து இதயமே சுக்கல்நூராக வெடித்துவிட்டதுபோன்ற வேதனைக்கடலில் வீழ்ந்து தத்தளித்தாள்.

மாடிக்குச் சென்றதும் ஸேதுராமன் விம்மலும் அகல்யாவின் பொருமலும் போட்டியிட்டுப் பெருங்குழப்பத்தையளித்தது. என்னவிருப்பினும் அகல்யா தனது பெண் தன்மைக்கேற்ற மென்மையான பொருமையை வரவழித்துக்கொண்டு, "அப்பா! நீங்கள் தாசி மகனா? நான் அனாமதேயமா? சொல்லுங்களப்பா. எத்தகைய சங்கடமான நிலைமையையும் பொருத்துவிடலாம். ஆரமுடியாத காயம் பட்டுவிட்டால்கூட அந்த ரணத்தின் பாதையை ஒருவாறு பொருக்கலாம். ஆனல் நாம் மிகமிக உயர்ந்தவர்கள் என்று அளப்பரிய அன்பை அப்படியே சொரிந்து விலைமதிப்பற்ற விச்வாஸத்தை வைத்துப் பூரிக்கும்—எதிர்பார்க்கும்—மனிதர்களின் வாயினல் அணுகுண்டினும் கொடிய பதினயிரம் பங்கு சக்திவாய்ந்த வெடிகுண்டு வீச்சுப் போன்ற வார்த்தைகள் வந்துவிட்டதால் அதைத் தாங்கவே முடியவில்லையப்பா. நேரே போய் சமுத்திரத்தில் விழுந்துவிடலாமா என்றுகூட அசுரதைரியம் வந்து ஆட்டுகிறது. ஆனல் அடுத்தக்ஷணமே அத்தகைய அசட்டுச் செய்கையால் உங்கள் கதி ஐயோ! மகா உத்தம சீலராகிய அவர் கதி என்னவாவது...என்ற விவேகம் கூடவே

உதித்துப் பொருமையை உண்டாக்குகிறது. வில்லம்பு சுட்ட வடு ஆரிவிடும். சொல்லம்பு வடு என்றுமே ஆராது. கண்ணுக்குத் தெரியாத இதய பாகத்தில் அளிந்த புண்ணு கவே இருக்கும். இந்தத் தத்வத்தை நான் பல புத்தகங்க ளில் படித்திருக்கிறேன். அந்தக் கதி இப்போது எனக் கும் வந்துவிட்டது. அப்பா! இதென்ன நான் மெஷின் போல் பேசிக்கொண்டே இருக்கிறேன். பதில் பேசாமல் மவுனம் சாதிக்கிறீர்களேப்பா!"

ஸேதுராமன் மெல்ல தன்னைச் சமாளித்துக்கொண்டு "கண்மணீ! பதருதே! உனக்கு இதுகாரும் சொல்ல சந்தர்பமும் அவச்யமும் ஏற்படாத ஒரு ரகஸியமான விஷயம் எங்கள் இதயத்தோடிருந்தது. அந்த பரம ரகஸ் யத்தை—இன்று வெளியிடும் சரியான சந்தர்ப்பத்தைப் பகவானளித்துவிட்டான். இனி தாமதிக்கமாட்டேன். நான் தாசி மகனும் அல்ல; வேசி மகனும் அல்ல. இந்த முதல் உறுதியை நம்பு—நீமனங்கலங்கித் தவித்த திகில்தீர நம்பு. நான் இப்போது சொல்லப்போகும் விஷயங்களில் சில ஸாரமான சுருக்கங்கள், வரலாருகள் இதோ இப்படி வா. இதில் சுமார் 45 வருஷங்களுக்கு முன்பு எழுதியிருக் கிறது. இதைப் படித்துப்பாரம்மா!" என்று கூறியபடி சென்று வெகுநாட்களாகத் திறக்கப்படாது பூட்டியே வைத்திருக்கும் ஒரு பெரிய ட்ரங்குப்பெட்டியைத் திறந்து அதிலிருந்து சில டைரிகளை அகல்யாவிடம் கொடுத்து, "கண்ணு! இதை சாவதானமாகப் படித்துப்பாரம்மா. உனக்கு விஷயம் புலப்படும். பிறகு இந்தச் சொல்லம்பு உன் மனத்தைக் குத்திப் புண்ணுக்கிய வடு சிறிது ஆறும்."

"அப்பா! இந்த இரவில் இதைப் படித்து அறியும் சக்தி எனக்கு இல்லை. சகலமும் விரிவாக நீங்கள் சொல்லி என்னைத் தேற்றுங்கள். இதை நான் பிறகு படித்துக் கொள்கிறேன்" என்று கூறியவாறு டைரியைப் பார்த் தாள். எத்தனையோ வருஷங்களுக்கு முந்திய வருஷ நம்ப ரையும் டயரியின் எழுத்தையும் பார்த்துப் பூரித்துப் போனுள்.

"கண்மணீ! நான் சொல்லப்போகும் விஷயம் ஒரு கதைபோலவிருக்கும். சிறந்த எழுத்தாளராய் நீ இருந் தால் உடனே இதை உணர்ச்சிமிக்க சிறுகதையாக எழுதி உலகமக்களை மகிழ்விக்கலாம். காதல், சோகம், திடும் திடும் என்று தூக்கிப்போடக்கூடிய அதிர்ச்சிகரமான சம் பவம் முதலியவைகள் தற்காலத்தின் சிறு கதைகளிலோ, பெருங் கதைகளிலோ வருகிறதாக நினைக்காதே. எத்தனையோ வருஷங்களுக்கு முன்பு எனது வாழ்க்கைச்

சித்திரத்தில் எத்தனைவித உணர்ச்சிகள் கலந்த கடந்த சம் பவங்கள் நடந்திருக்கின்றன என்பதை கதை படிப்பது போல் படிக்கிறேன்; கேளம்மா"....

---

## 15

### புதிய அலையில் பழைய ஒலி!

கருப்பம்பட்டி என்பது பெரிய ஊர். பல ஆபீஸ்கள், கோர்டுகள், துறைமுகம் முதலிய உத்தியோகஸ்தர்கள் அமைந்திருப்பதால் அங்கு பெரும்பாலும் தனவந்தர்களே அதிக மாகவிருந்தார்கள். அந்த ஊர் சுற்றியுள்ள க்ராமங்களில் விவசாயத் தொழில் ஏராளமாக நடந்து வந்தது. அத்த கைய க்ராமங்களைச் சேர்ந்தசங்கரம்பட்டி என்கிற அழகிய க்ராமத்தில் சுமார் 25 வேலி நில புலன்களுக்குச் சொந்த மாகவும் ஏகசக்ராதிபதியாயும் விளங்கினர் ஸ்ரீமான் சதா சிவம் என்கிற பெரியார்.

அத்தனை பெரிய மிராசுதாராக இருந்தும் அவருக்கு ஒரு குழந்தை பிறக்காத குறையால் குடும்பமே ஏக்கமுற்று தவித்தது. இக்காலத்திய சில அதிகப்ரஸங்கிகளைப்போல் பெரியவர்களை மதிக்காமலும்—தன் போக்கே தனக்கு நன்மை என்கிற அசட்டுத் தைரியத்துடன் பெரியவர்கள் நெஞ்சம் புண்ணாகும்படி தூக்கி எறிந்து பேசி மனத்தை நோகவடித்து அலக்ஷியம் செய்யும் புத்தி அக்காலத்தியவர் களிடம் பெரும்பாலும் இருந்தது கிடையாது. சொல்கிற படி எல்லாம் எத்தனையோ வ்ருதாதிகளைச் செய்தும் தான தர்மங்களைச் செய்தும், ப்ரார்த்தனைகள் செய்தும் வந்தார்கள். ஆனல் புத்திரப் பேரு உண்டாகவில்லை. இனி குழந்தை பிறக்குமா? வயதாகிவிட்டதே. மதுரத் தைப்போன்ற மாணிக்கம் இவ்வுலகில் கிடைக்குமா என்று அந்தம்மாளைப் பார்த்துச் சிலர் பரிதாபப் பட்டார்கள். பின்னும் சிலர் ஸ்வீகாரப் படலத்தைத் தொடங்கிவிட் டார்கள். பிறகு கேட்கவேண்டுமா! என் மகனைத் தருகி றேன்; உன் மகனைத்தருகிறேன் என்கிற படை எடுப்பும் அதனல் விரோதமும்கூட உண்டாகியது.

தம்பதிகளின் அத்புதமான அன்யோன்யமும் பொரு மையும் சொல்லி முடியாது. சதாசிவம் அக்காலத்திலேயே நன்ருகப் படித்து பி. ஏ. பட்டம் பெற்று உத்யோகத்திலி ருந்தபடியே நிலபுலன்களையும் கவனித்துவந்தார். அப் போது வேலப்பட்டியில் முருகக்கடவுளுக்குத் திருவிழா

வந்தது. மகா தெய்வபக்தியுள்ள சதாசிவம் எந்த ஊரில் பெரிய உத்ஸவங்கள் நடக்கின்றதோ அங்கு தன் பத்னியுடன் சென்று ஸேவிப்பது தவிர வண்டி வண்டியாகச் சாமான்களைப் போட்டுக்கொண்டு போய் ஸேவார்த்திகளுக்கு வயிரார உணவளித்து, அத்தனைபேர்களுடைய ஆசியைப் பெருவார்.

அந்தமுறையும் அப்படியே வேலம்பட்டி உத்ஸவத்திற்கு ஒரு பெரிய வண்டி நிறையச் சாமான்களுடன் தங்கள் அழகிய இரட்டைக்காளை பூட்டிய மெத்தை தைத்த வில் வண்டியில் அமர்ந்து சென்று உத்ஸவத்தை வெகு சிறப்பாக நடத்தினர். அந்த சுற்றுவட்டாரங்களில் எங்கு உத்ஸவாதிகள் வந்தாலும் இவர்களுடைய அன்னதானந் தான் சிறந்ததாக விளங்கியது.

அன்று உத்ஸவம் முடிந்து ஸ்வாமி கோயிலுக்கு எழுந்தருளும்போது பின் மாலை 5 மணியாகிவிடும் என்று தெரிந்ததாலும் இவருக்கு மருநாள் ஆபீஸில் முக்யமான அலுவல் இருப்பதாலும் இரவு 12 மணிக்கே வண்டிகளைக் கட்டிக்கொண்டு கிளம்பிவிட்டார்கள். சுமார் 2 மணி நேரத்திற்குச் சாமான்களை ஏற்றிவந்த வண்டிக்காரன் அரைகுரை தூக்கத்துடன் ஆடி வழிந்து செல்கையில் அதே வண்டிக்குள் ஒரு குழந்தை அழும் சத்தங்கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

போகும்போது மூட்டை மூட்டையாய்ச் சாமான்கள் ஏற்றிவந்த வண்டி காலிக் கோணிப்பையும் வைக்கோலும் எண்ணை, தயிரு, நெய், பால் காலி டப்பாக்களும் நிறைந்திருந்ததன் மத்தியில் குழந்தை அழுத சத்தங்கேட்டதும் பேயோ பிசாசோ! தன்வண்டியில்புகுத்துவிட்டது என்கிற கீழ்த்தரமான எண்ணமே தோன்றி பயந்தான். "அடியாத்தாடி! ஐயயோ! ஏய்! காளிமுத்து! வண்டியை நிறுத்து... நிறுத்து!" என்று கத்தினன்.

சதாசிவத்தின் வில்வண்டி கனஜோராக பறந்து செல்கிறது. எனினும் பின்னல் வரும் வண்டியையும் அவ்வப்போது கவனித்துக் கொண்டுதான் போனர். நடுநிசியில் ஒரு குழந்தை அழும் குரல் வண்டிக்காரனின் கத்தல் இரண்டும் கேட்டு அந்த வண்டியை சதாசிவம் நிருத்தச் செய்துவிட்டு கைத்தடியுடன் கனவேகமாக வண்டியருகில் வந்து, "என்னடா கருப்பையா? ஏன் கத்துகிருய். என்ன விசேஷம்!" என்ருர்.

கருப்: எசமான்! பவலுக்கே அல்லா சாமானும் தீந்து பூட்டதாலே தீவட்டி எண்ணை டின்னைக் கீழே எறக்கி வச்

சுட்டு சாமான் கோணிங்களே ஒழுங்காக வச்சேனுங்க. தீவட்டி எண்ணே காலியானதும் டப்பாவையும் வச்சுட்டு சாமிபாத்துக்கிட்டுப் போரவுங்க வண்டியோடே நானும் கிளம்பினேனுங்க. பேயோ! பிசாசோ பாதிராத்திரிலே கொயந்தே வடிவமா கத்துதுங்க!"

இதற்குள் மதுராம்பாளும் இறங்கி ஓடிவந்து முதலில் வண்டிக்குள் கவனிந்தாள். சாக்குகள், டின்கள், வைக்கோல் முதலியவைகளுக்கு மத்தியில் ஒரு குழந்தை "அம்மா...அம்மா"....என்று அலறிக்கொண்டிருந்ததைக் கண்டதும் அந்த அம்மாளுக்கு எங்கிருந்துதான் அத்தகைய புத்திர வாத்ஸல்யமும் கரைபுரண்ட அன்பும் பெருக்கெடுத்து வந்ததோ தெரியாது. ஸ்த்ரீகளுக்குள்ள இயற்கையான குணத்துடன் பாய்ந்தேரிக் குழந்தையை வெளியில் தூக்கினுள்.

இத்தனே சாமான்களுக்கு மத்தியில் நசுங்குண்டு அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த குழந்தை திடீரென்று எழுந்து அழுவதால் பயமும் அதிர்ச்சியும் வியர்வையும் கூடி குழந்தை ஜலத்தில் மிதப்பதுபோல் மிதந்துகொண்டிருந்தது. விசும்பல் குழந்தையைக் குலுக்கியது. அன்று சுத்த சித்ர பவுர்ணமியாகையால் பகல்போன்ற நிலவில் அக்குழந்தையை எடுத்துத் தன் புடவைத் தலைப்பால் துடைத்து தோள்மீது சாத்திக்கொண்டு சமாதானம் செய்த பிறகு முகத்தைப் பார்த்தாள்.

மன்மதவடிவாய் குருகுருவென்ற விழியும், சுருட்டைச் சுருட்டையாய்த் தலைமயிரும், கட்டுமத்தான பருமனும் செக்கச் சிவக்க கதுப்புவாய்ந்த கன்னமும் உருட்டு உருட்டான கை கால்களும் கண்டு மதுரத்தின் இதயத்தில் அமுதமே சுரந்து...."இதோபாருங்கோன்ன! வடிவேலன் நமக்கு விடிவுகாலத்தைக் காட்டி ஒரு வடிவழகான குழந்தையைக் கொடுத்துவிட்டார். இதோபாருங்கோ....பேயாம் பிசாசாம். கீழ்சாதி புத்திதானே கருப்பனுக்கு" என்று சதாசிவத்தைக் கூப்பிட்டாள்.

அவரும் ஓடோடியும் வந்து பார்த்து ப்ரமித்துப் போய் "இதென்ன ஆச்சரியம் மதுரம்! இந்த வண்டிக்குள் எப்படி இக் குழந்தை தூங்கியிருக்கும். பார்த்தால் நல்ல உயர்ந்த ஜாதிக் குழந்தையாகவே காணப்படுகிறது. ஐயயோ! பாவம்! யாருடைய குழந்தையோ! யார் தவியாய்த் தவித்துத் தேடுகிறார்களோ! தெரியவில்லையே" என்று கூறி குழந்தையின் தலையை நிமிர்த்தினர். உச்சிப் பூ சுட்டியுடன் குழந்தை ராஜ வடிவாயிருப்பதைக் கண்டு

அவர் உள்ளத்திலும் ஒரு புதிய உணர்ச்சி ஊற்றெடுத்தது. "பாப்பா! இதோபாரு....உன் பேரென்னடா கண்ணு"... என்றார்.

குழந்தை அழுகை ஓய்ந்ததும் தன் தாயார் தோளின் மீது சாய்ந்திருப்பதாக எண்ணி மருப்படியும் தூங்கிவிட்ட தால் பேசவில்லை. "மதுராம்பா! இப்போது நாம் என்ன செய்யலாம். இன்னும் உத்ஸவம் முடிந்திருக்காது. வண்டியைத் திருப்பி விடுவோமா?" என்றார்.

மதுராம்பாள் தோள்மீது அப்படியே ஒட்டிக்கொண்டு தூங்கும் பேரானந்த உணர்ச்சியை இன்றே கண்டனு பவிக்கிறு ளாதலால் அவளுக்கு எதனுலோ கண் ணீர் மடமடவென்று வழிந்துவிட்டது. "வண்டியைத் திருப்பவேண்டாம். நம் வாழ்க்கை வண்டியைத் திருப்பி வளம்பெறச் செய்வதற்காகத்தான் இந்த வடிவேலன் ஒரு பால்மணம்மாருத குழந்தை வடிவமாய் வந்து நம் சாமான் வண்டியில் உறங்கி நமது வெகுநாளைய புத்திரப் பேற்றைக் கொடுத்துவிட்டான் என்றே எனக்கு உள் மனத்தில் ஏதோ ஒன்று சொல்கிறது. ஆகையால் நாம் இக்குழந்தையுடன் வீட்டிற்குப் போய்விடுவோம். ஸ்ரீ ஆண்டாள் திருத்துழாய் வனத்தில் அகப்படவில்லையா. ஸீதாபிராட்டி கலப்பையின் கீழ் அகப்படவில்லையா. இது போல் புராண இதிகாஸங்களில் ஏராளமாய்ப் படித்திருப் பதை நம் வாழ்விலும் கண்டுகளிப்போமே?" என்றாள்.

"எனக்குக்கூட அப்படித்தான் தோன்றுகிறது. இருந்தாலும் பெத்தவர்கள் தேடி அலையும்போது அவர்கள் வயிற்றெறிச்சல் நம்மை வதைக்குமல்லவா என்று பயப்படு கிறேன்" என்று கூறி முடிப்பதற்குள் காளிமுத்துவும் கருப்பையாவும் ஏககாலத்தில் ஏகமனத்தில், "ஏன் எஜ மான் நாம் என்ன கொயந்தையே திருடிக்கிட்டா லந்துட் டோம், அதுவா நம்ப வண்டியிலே....அம்மா சொல்ராப் போலே வடிவேலகாட்டும் வந்து படுத்துக்கிச்சே. அதை எடுத்து நாம் ராசா மாதிரி காப்பாத்தத்தானே போரோம். இதிலே தப்பு இன்னுங்க....அப்படி யாராச்சும் கேட்டா கொடுத்துப்புட்டா போவுது. கொயந்தையே பாத்தா ரெண்டு வயசுகூட இல்லேபோல தோணுது, இதனல் பெரிய வண்டிலே அது எப்படி ஏறி படுத்துக்கிச்சோ! அதல்ல ஆச்சிரியமாயிருக்குது. அந்தபெரிய திருவிழாவிலெ ஆயிரக்கணக்கான ஜனங்க நூத்துக்கணக்கான க்ராமத் திலேர்ந்து வந்திருந்தாங்களே. இதை யாருண்ணு நம்ப பாக்கறது எசமான்...வீட்டுக்கே பூடலாம்" என்று பலமான பீடிகையுடன் அபிப்பிராயங் கொடுத்தார்கள்.

சதாசிவன் எஜமான், வண்டிக்காரர்கள் அவரிட்ட வேலையைச் செய்யும் வேலைக்காரர்கள்தான். இருந்தாலும் சிலசில சந்தர்ப்பங்களில் அவர்கள் சொல்லுவதிலும் உண்மையும் உயர்ந்த கருத்தும் இருந்தால் அதை எடுத்துக் கொள்ளத்தானே வேண்டும். அப்போதும் சதாசிவத்திற்கு மட்டும் பெற்றோரைப் பிரித்த பாவம் தனக்கு வந்து விடுமோ! என்ற பயம் வாட்டி வதைத்தது. சிறிது நேரம் ஏதோ யோசனை செய்தார். வடிவேல் முருகனைத் திக்கு நோக்கித் தண்டனிட்டு "அப்பா! முருகா! இது நீ அளித்த ப்ரஸாதமானல் எனக்குக் கொடு. அல்லது அதன் பெற்றோருக்கே உரிமையானல் அவர்களுக்குக் கொடு. ஏதோ உன் ஆணையை முன்னிட்டுத் திருவுள்ளச் சீட்டுப் போடுகிறேன். உத்திரவு கொடு" என்று வேண்டி ப்ரார்த்தனை செய்துவிட்டு சிறிய காகிதத்தில் முருகன் ப்ரஸாதம்-பெற்றோரின் உரிமை என்று இரண்டு துண்டுகளில் தனித் தனியே எழுதி அழகாக மடித்தார். பகவான் பாதத்தை இதயபீடத்திலமர்த்தி பூஜித்தார்.

அதைக் குலுக்கிப் போடும் சமயம் 'அம்மா!' என்று குழந்தை மறுபடி கண்விழித்தது. இதுவே ஒரு பெரிய சுபசகுனமாக எண்ணிய சதாசிவம் அன்று முருகன் அமுது செய்த ஜிலேபியில் ஒரு துண்டைக் குழந்தையின் வாயில் வைத்தார். இனிப்பின் சுவையறிந்த குழந்தை நன்ருக இடுப்பில் அமர்ந்து கையை நீட்டியது. மற்றொரு துண்டைக் கையில் கொடுத்து பின், "பாப்பா! இதோ இதைப் போடுகிறேன். இதில் ஒன்று எடுத்துத்தரயா. இன்னும் அப்பச்சி தருவேன்" என்று கூறி சீட்டைக் குலுக்கிப் போட்டார்.

குழந்தை ஜிலேபி சாப்பிடும் ஆனந்தத்துடன் அந்த இனிப்பான பாகு கையில் ஒட்ட அதோடு ஒரு சீட்டை எடுத்துக் கொடுத்தது. பிரித்துப் பார்த்த சதாசிவம் ஒரே குதிகுதித்தார். முருகனின் ப்ரஸாதம் நமக்குக் கிடைத்து விட்டது மதுரம். இனி நம்மிஷ்டப்படியே வீட்டை நோக்கி வண்டியை விடலாம்" என்று கூறி தான் குழந்தையை வாங்கிக் குதிநடை போட்டுப் பூரித்தபடி வில்வண்டியில் ஏற்றிக்கொண்டு கிளம்பினர். குழந்தை இரண்டு வயது கூட மதிக்கமுடியாத சிறியதாக இருப்பினும் மழலையில் கூடைப்பேச்சுப் பேசியது. சிலது புரியவே இல்லை. பின்னும் சற்று நேரத்திற்கெல்லாம் குழந்தை தூங்கி விட்டது.

விடியற்காலை ஊர் வந்து சேர்ந்தார்கள். பிறகு கேட்க வேண்டுமா! கடவுள் ஒரு குழந்தையைக் கொடுத்துவிட்ட

விசித்திரம் ஊர் பூராவும் காட்டுத்தீபோல பரவி பலபல விஷயங்களை உதிர்த்தன. அவைகளில் சந்தோஷமும், அனுகூலமும் கலந்த இனிப்பான குரல்கள் மிகக் குறைவு தான். த்வேஷம், வெறுப்பு, அஸூயை, அகங்காரம், சுய நலம், அப்பப்பா! சொல்லவாவேண்டும். பாணங்கள்போல் கிளம்பி பரிகஸித்ததும் கொஞ்சநஞ்சமல்ல.

கடவுள் கிருபையால் கிடைத்த குழந்தை! தன் வீட்டையோ, தாய் தந்தையரையோ, கூடப்பிறந்தவர் களையோ ஒன்றுமே நினைக்காமல் இங்கேயே வெகுவாய்ப் பழகியதுபோல் நிம்மதியாக ஓடி ஆடி குஷியுடன் "அம்மா! அப்பா!" என்று இவர்களையே அழைத்துப் பூரித்த ஆச்சரி யம் சொல்லிமுடியாது. குழந்தை கிடைத்த நாளைக் கொண்டாடி கோயிலில் பூஜை, தளிகை முதலியன செய்து இன்புற்றார்கள்.

பந்துக்களில் சிலர் தங்கள் குழந்தையை ஸ்வீகாரம் செய்துகொள்ளாது இப்படியொரு அனாமதேயக் குழந்தை யைக்கொண்டு வைத்துக் குதூகலிப்பதைப் பொருக்காது 'அக்குழந்தைக்குச் சாவு வராதா! அதற்கா இத்தனை லக்ஷ கணக்கிலுள்ள சொத்துக்கள் சேரப்போகிறது' என்று வயிரெரிந்தார்கள். அதிலும் அறிவுகெட்ட சிலர் 'சதா சிவத்திற்கு வைப்பாட்டி எங்கேயோ இருந்திருக்க வேண் டும். அவளுக்குப் பிறந்த குழந்தையைக் கொண்டுவந்து பந்தியில் குலாவி ஏதோ பொய்க் கதை கட்டி அளக்கின் றான்' என்று சிலர் துணிந்து கூறினார்கள்.

இதுவரையில் தன்னை மறந்து வெகு ஸ்வாரஸ்யமாய்க் கதை கேட்டுக்கொண்டிருந்த அகல்யா சடக்கென்று ஏதோ ஒரு உணர்ச்சியால் உந்தப்பட்டவளாய்....அப்பாப் பா!...இப்போ எனக்கு புரிந்துவிட்டது....அந்த குழந்தை நீங்கள் தானேப்பா....அல்லது...குழந்தை வந்த பிறகு அவர்களுக்கு நீ பிறந்தாயா...சொல்லுப்பா! சீக்கிரம் சொல்லப்பா....என்று பிதாவின் தோளைப் பிடித்து ஆட்டி னாள்.

இதோ பாரு கண்ணா! எந்த ஒரு விஷயத்திற்கும் பொறுமை வேண்டும். மத்தியில் இப்படி குறுக்கே பாய்ந் தால் எத்தகைய விஷயமாயினும் ருசி குறைந்து சப்பிட்டு விடும். கிணற்று நீரை வெள்ளமா கொண்டுபோய்விடும். உன் மனத் துடிப்புக்கு மருந்தல்லவா நான் சொல்லும் கதை. ஆகையால் அமைதியாகக் கேளம்மா....பொறுமைக் காரர்களின் கண்ணெச்சல் படபட கடவுள் கருணையால் குழந்தை வெகு துருதுருவென்று வளர்ந்து சொர்ண விக்ர கம் போன்றாகிவிட்டது. வெகு நாட்கள்வரையில் இக் குழந்

தையைத் தேடிக்கொண்டு யாராவது வருவார்களோ! அப்படி வந்தால் அவர்களிடம் கெஞ்சிக்கூத்தாடி இக்குழந்தையைத் தாமே வைத்துக்கொண்டு அந்தக் குடும்பத்தையே காப்பாற்றிவிடுவது என்று சதாசிவம் தீர்மானித்து விட்டார்.

ஆனல் அதைத் தேடிக்கொண்டு யாருமே வரவில்லை. சதாசிவத்தின் தாயார் ஸேதுவுக்கு அழைத்துச்சென்று நாகப்ரதிஷ்டை செய்து வேண்டிக்கொண்டாளாம். அந்தம்மாளின் கண்முன்பே இக்குழந்தை கிடைத்துவிட்டதால் அதற்கு ஸேதுராமன் என்கிற பெயரை இட்டார்களாம்.... என்று கூறும்போது அகல்யாவுக்கு இத்தனைநேரம்இருந்த துக்கம் அதிர்ச்சி எல்லாம் எப்படியோ ஒருநிமிடம் மின்னல் வேகத்தில் மறைந்திருந்ததுபோல் விலகி ஒரு குதிகுதித்துத் தன் பிதாவைத் தழுவிக்கொண்டு அப்பா! அப்பா! உம், மேலே சொல்லுங்கள். ஸேதுராமன் கதை மேலே என்ன வாயிற்று, என்று சிறியக் குழந்தையைப்போலக் கொஞ்சினள்.

குழந்தையின்மீது த்வேஷங் கொண்டிருந்த ஒருசில இராதகர்கள் அக்குழந்தையைத் துலைத்துவிடுவதற்கும் துணிந்து தற்செயலாகக் குழந்தை தவறி விழுந்துவிட்டதாக ஒரு பொய்ச் சாதனையைச்செய்து தண்ணீர் நிறைந்த கங்காளத்தில் தூக்கிப்போட்டுவிட்டகொடுமையைஅவர்கள் வீட்டு மாட்டுக்காரப் பையனே பார்த்துக் குழந்தையைத் தூக்கிக் கொண்டுவந்து பெற்ருேரிடம் கொடுத்தான். என்ன நெஞ்சு துணிச்சல். இனி இந்த ஊரில் நாம் இருந்தால் கட்டாயம் குழந்தையை யாராவது வேண்டுமென்றே கொன்றுவிடுவார்கள். அவன் நமக்கு முருகன் ப்ரஸாதமாய் கிடைத்தவேளை அதிரிஷ்ட தேவதையின் கடாக்ஷமும் நிரம்பிப் பெருகுகிறது. என்னை வடநாட்டில் மாற்றுவதாகச் சொல்கிருர்கள். முதலில் நான் போகவேண்டாம் என்று நினைத்தேன். இனி அதை மாற்றிக்கொண்டு நான் வெளியூர் செல்லத் தயார் என்று சொல்லிவிடட்டுமா அம்மா...மதுரம், நீயும் என்ன சொல்கிருய், என்ருர்.

இருவருடைய சம்மதத்தின்பேரில் தனது ஆப்த-உண்மையான-ஊழியர்களாகிய கருப்பய்யா, காளிமுத்து இருவர் வசமாகத் தமது வீடுவாசல், மாடு கன்று சகலத்தையும் ஒப்படைத்தார். சோவாசியிடம் நிலங்களை விட்டார். தனது சகோதரியை வீட்டிலிருக்கச் செய்தார். வடநாட்டிற்கு சென்றுவிட்டார். இக்காலத்தில் ஐ. ஏ. எஸ்ஸிற்க்குக்கூட மதிப்பில்லை. கிரைவிரையாகிவிட்டது. அக்காலத்தில் டிப்டி கலெக்டர் சதாசிவம் என்ருல் கவர்னருக்குச்சமமாக மதிப்பார்கள். அங்கு சென்றபிறகு அவருடைய அந்தஸ்து ஆயிரம் பங்காக உயர்ந்தது.

ஸேதுராமனும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தான். வருடங்களும் ஒன்றி ரண்டெனப் பல உருண்டோடிவிட்டன. ஸேதுராமன் B. A. பாஸ் செய்துவிட்டான். இரண்டு வருடங்களுக்கொரு தரந்தான் தன் சொந்த ஊருக்கு சதாசிவம் லீவில்வந்து இரண்டு மாதங்கள் இருந்து சகலத்தையும் கவனித்துச் செல்வார்.

அகல்யா குறுக்கிட்டு....அப்பா....அந்த ஸேதுராமனுக் குத் தான் சதாசிவத்தின் முருகப்ரஸாதம் என்பது தெரியுமாப்பா? என்றாள்.

பார்த்தாயா? குறுக்கிடாதே என்று சொன்னேனே; மறுபடியும் குழந்தை மாதிரிக் கேட்காதேம்மா! அவனுக் குத் தெரியவே தெரியாது. இக்காலத்தைப்போல் அக் காலத்தில் பிள்ளைகளுக்கு 25—30—35—என்று வயதை வளர்த்தி விவாகம் செய்வது வழக்கமில்லை. பெற்றோர் களின் வயசுகாலத்தில் அவர்கள் பார்த்து நல்லபெண்ணை நிச்சயம் செய்துக் கல்யாணத்தை முடிப்பார்கள். அது போல் சதாசிவம் தன்மகனுக்குக் கல்யாணத்தைத் தன் தாயார், 75 வயது கிழவியின் கண்ணால் கண்டுகளிக்கும் வண்ணம் செய்ய உத்தேசித்தார்.

தன் மகனிடம் இதை ப்ரஸ்தாபிக்க நேரத்தையும் பார்த்துக்கொண்டிருந்தார். இங்குதான் கதையில் உனக்கு முக்ய ரஸமான கட்டம் ஆரம்பமாகிறது கண்ணு! ஸேது ராமனின் காலேஜ் ப்ரொபஸர் ஸ்ரீமான் வெங்கட ரத்னம் என்பவர் மிகமிக நல்லவர். மகா வீர தீர சூரர் என்றால் மிகையாகாது. அவருடைய நன்மதிப்புக்கு ஸேதுராமன் அறிவுமட்டும் பயன்படாமல் அழகும் அந்தஸ்தும்கூட பயன் பட்டது.

இனிமேல் ராமன் என்றுமட்டும் சொல்கிறேன். ராமன் அடிக்கடி வெங்கடரத்தினத்தின் வீட்டிற்குப் போவான். சதாசிவமும் அவரும் அத்யந்த சினேகிதர்கள். வெங்கடரத்தினத்திற்கு நான்கு குழந்தைகள். மூத்தவள் ஸீதாலக்ஷ்மி. வெகு புத்திசாலி, அழகி, கேட்கவேண்டுமா? அவளுடைய கண்வலையில் ராமன் சிக்கிவிட்டான் என்றால் மிகையாகாது. சிறிய பாலிய சினேகம் அன்பாகிக் கனிந் துக் காதலாகிப் பழுத்துவிட்ட ரகஸியம் அவ்விருவருக்கு மட்டுந்தான் தெரியும். ஆனால் இக்காலத்தைப்போல் அக் காலத்தில் அதிகமாகத் தனியாய் சந்திப்பது, பேசுவது, தனியாகப் போவது முதலிய ஒன்றுமே கிடையாது.

ராமன் வீட்டில் சதாசிவன் ராமாயணம் வாசித்துப் பட்டாபிஷேகம் செய்தபோது இவர்களை எல்லாம் அழைத்

திருந்தார். அப்போது அவர்கள் குடும்பத்துடன் வந்திருக்கையில் ஸீதாலக்ஷ்மியின் அழகைக்கண்டு சதாசிவம், மதுராம்பா இருவருங்கூட பூரித்துப்போனார்கள். அவர்களுடைய முகத்தில் எழுந்த உணர்ச்சி ரேகைகளைக் கண்ட ராமன் தனக்குக் கட்டாயம் ஜெயம் உண்டாகிவிட்டதாகவே எண்ணித் தன்னுடைய அந்தரங்கக் கோட்டையில் ஸீதாலக்ஷ்மியின் உருவத்தை வெகு ஆழமாக ஆவாகனம் செய்துவிட்டான்.

ப்ரொபஸரைப் பார்க்க வீட்டிற்குப்போவது எப்படி தெரியுமா? அவர் வெளியே போயிருக்கும் உளவை நன்றாக அறிந்த திருடன் பூனைபோல் செல்வான். ஏதோ அதிர்ஷ்டவசமாக லக்ஷ்மி அங்குவந்து அப்பா இல்லையே! வெளியே போய்விட்டார்...என்று யாழிசைப்பதுபோல் சொல்வதைக்கேட்டு ராமன் சொக்கிப்போய்விடுவதோடு இந்த சரியான ஸந்தர்ப்பத்தை உபயோகிக்கும் முறையில் சற்றுநேரம் பேசிவிட்டும் வருவான்.

ஒருதினம் ராமன் வீட்டிற்கு வரும்போது முன்கட்டு ஹாலில் பாட்டியும், அவன் பிதாவும் பேசும் குரல் காதில் பட்டது. தன் விஷயமாகப் பேசுகிறார்கள் என்பதை உணர்ந்து ராமன் மறைவில் நின்று சகலத்தையும் கேட்க அவா கொண்டான்.

அவ்வளவுதான், அவர்கள் பேசிய பேச்சு தன் வாழ்க்கைச் சக்கரத்தையே பிறட்டும் முறையில் செல்வதைக் கேட்டு திகிலும், துக்கமுமாய் சூழ்ந்து செய்வதறியாது தடை கட்டிய நாகம்போல் அப்படியே நின்றுவிட்டான்.

183223



## பழங்கால-நவீனகால கை வேலைப் பொருள்கள்

பல்வேறு காலங்களைச் சேர்ந்த கையெழுத்துச் சுவடிகள் சித்திர விளக்க முன்னவை-ஒரு தனிப் பகுதியில் இருக்கின்றன. அங்கே பஞ்சாப் கிராமங்களின் பழங்கால நவீனகாலக் கைவேலைப் பொருள்களடங்கிய பகுதி ஒன்று இக்காட்சிச் சாலையில் விசேஷமான பிரிவாக விளங்குகிறது.

இந்தப் படத்தில் பஹாடி பிரிவு ஓவியங்களைச் சேர்ந்த சித்திரமொன்றைக் காணலாம். வஸந்தகாலத்தில் பெண்கள் பறவைகளுக்கு இரைபோடுவது அதில் சித்தரிக்கப் பட்டிருக்கிறது.



பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்

அருணை

கர்ப்பாசயரோக நிவாரணி

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

AYURVEDASRAMAM (PRIVATE) LTD.
MADRAS-17.

## வை. மு. கோ. நாவல்கள்

**ரூ. 4.**

சாந்தியின் சிகரம்

**ரூ. 3.**

வைதேகி (2 பாகம்)
நிர்மலநீரோடை

**ரூ. 2-50**

மலர்ந்த இதழ்
வானக்குயில்
மதுரகீதம்

**ரூ. 2.**

அருமைப்பெண்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
பாதாஞ்சலி
புனிதபவனம்
குணக் குன்று
ஜீவநாடி
தப்பதியும் ராஜாராம்
[முதல் பாகம்]

**ரூ. 1-75**

கலாநிலயம்
சிலாசாசனம்
அமைதியின் அஸ்திவாரம்
கடமையின் எல்லை

**ரூ. 1-50**

பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
மகிழ்ச்சி உதயம்

**ரூ. 1-25**

கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோவில்
வீரவஸந்தா

**ரூ. 1-13**

அபராதி

**ரூ. 1.**

வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
தபால் விநோதம்
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

**நயாபைசா 75**

பக்ஷமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண முறைகள்

**நயாபைசா 50**

உளுத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

## வை. மு. ஸ்ரீ.

| | |
|---|---|
| தீபஸ்தம்பம் | 4-0 |
| உதய சூர்யன் | 1-25 |
| பெண்மணிக்கனல் | 1-0 |
| இருளில் ஒளி | 1-25 |
| தியாகபலி | 0-75 |
| ஜயந்திசிந்தனைகள் | 1-50 |
| கோதாஹ்ருதயம் | 0-75 |
| ஸ்ரீஸ்துதி | 0-25 |

## வை. மு. பத்மினி

ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம் ரூ. 1-50

பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1-0

**சுத்தானந்த பாரதி**
சாந்தி கீர்த்தனம் 3-50

**ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி**

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமடீகை 1-0

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.